
www.padippakam.com

225

# சங்கமம்
# SANGAMAM

இல : 25   No : 25

மடங்கல் : 94   August : 94




"தேசப்பற்றோடும் மக்கள் நேயத்தோடும்
மண்ணுக்கு அவர் மகத்தான சேவை ஆற்றினார்."

படிப்பகம்

www.padippakam.com

**Sangamam :**
**Udgiver : Dansk Tamilsk Venskabsforening .**

**Ansvarshavende :**

G . Anandan .

**Med hjælper :**

V.K.Suresh .
S.S.Baskaran .
Ulf Cristiansen .
S. Ekamparanathan .
S.K.Manoharan .
S.Subramaniyam .
Layout : S.S.Muthu .

**Issn - 0905-6246 .**

**சங்கமம் வெளியிடுவோர்**
**டெனிஸ்தமிழ் தோழமை ஒன்றியம் .**

**பத்திரிகைப் பொறுப்பாளர் .**
**க . ஆனந்தன் ,**

**உதவியாளர்கள்**
Ulf Cristiansen
V . K . சுரேஸ் .
S . S . பாஸ்கரன் .
செ . ஏகாம்பரநாதன் .
S . K . மனோகரன் .
ச . சுப்பிரமணியம் .
வடிவமைப்பு ச . ச . முத்து .

படிப்பகம்

www.padippakam.com



Vores mening om " SANGANAM " foreningen, vores arbejde og de vanskeligheder, vi møder.

Ordet " venskab " skal ikke kun bruges mellem danskere og tamilere, men også mellem tamilere indbyrdes. Vi forsøger at arbejde hårdt på at tilfredsstille medlemmernes ønsker. Vi vil meget gerne høre foreningsmedlemmernes ( danskernes og tamilernes ) mening om, hvordan man synes, at denne forening skal fungere på en fornuftig, demokratisk måde.
Vi siger velkommen til nye medlemmer og velkommen til nye ideer om, hvordan vi kan fortsætte foreningsarbejdet for at nå det fælles mål.
Der findes blandt os nogle mennesker, der taler meget om demokrati og folks meninger, men i realiteten er de ligeglade med nye meninger og ideer. Det er nødvendigt at fortælle, at vi møder mange vanskeligheder i vores forsøg på at køre denne forening. Vi havde forventet det fra disse mennesker. Vi har problemer.
Det er helt uforståeligt, at når nogle mennesker forlader et arbejde i en forening, at de så, selv om de har pligt til det, ikke tilbageleverer ting og materialer, der tilhører foreningen. Det er skandaløst, at de stadig nægter at levere foreningens ting tilbage.
Overfor de mennesker vil vi påpege, at flertallet af medlemmerne støtter vores måde at køre foreningen på.
Problemerne kan måske forsinke vores arbejde, men de kan ikke stoppe os på nogen måde.
Ethvert menneske har et talent for et eller andet. Lad os glemme den opfattelse, at bestemte jobs kun er for bestemte mennesker.
Lad være med at tøve med din mening om, hvordan vi skal køre denne forening på en demokratisk måde.



படிப்பகம்

www.padippakam.com



# சங்கம் சங்கமத்தின் பாதையும் தடைகளும்

தோழமை என்பதன் உயர்ந்த அர்த்தமாக தமிழ்—டெனிஷ் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நெருக்கத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் ஈழத் தமிழ்த் தேசியத்தின் அபிலாசைகளை வெற்றிகொள்ள உதவுவதே சங்கத்தின் நோக்கமாகும். இன்றைய சங்கம் இந்த நோக்கத்தை நோக்கிய பயணத்தில் பெரும்பான்மையான முழுமையான பொதுச்சபையின் ஆதரவுடன் செயற்திட்டங்களை வகுத்து நிற்கிறது. கருத்துப்பரிமாற்றம் சுயவிமர்சனம் என்பவற்றுக்கூடாக ஜனநாயகமுறையில் வகுக்கப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக சங்கமமும் சங்கமும் முழு வீச்சுடன் நிற்கிறது.

ஆனால் ஜனநாயகம் மக்கள் கருத்து என்ற வார்த்தைகளை பெரிதாக சொல்பவர்கள் இன்று மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாமல் ஜீரணித்துக் கொள்ள முடியாமல் பல தடைகளை எமக்கு ஏற்படுத்துவதை இந்தத்தருணத்தில் மக்களுக்கு நாம் சொல்ல வேண்டியுள்ளது. நாம் இத்தகைய செயற்திட்டத்தில் இறங்கியபோதே இத்தகைய தடைகளை எதிர்பார்த்தோம். நாம் முன்னரே எதிர் பார்த்த தடைகள் இன்று நம்மை பல வடிவங்களில் எதிர்கொள்கிறது. ஒரு சங்கம் இயங்குவதற்கு தேவையானவற்றை அந்தச் சங்கத்தின் பொருட்களைத் தடை செய்வதால் சங்கம் இயங்காமல் விட்டுவிடும் என்பது கைகளால் சூரியனை பொத்திவிட நினைக்கும் சுத்தமான கற்பனையே. இந்தப் பொருட்களை தடை செய்வதால் சங்கத்தின் செயற்திட்டங்கள் தாமதப்பட முடியுமே தவிர அழிந்து விடாது. நிச்சயமாய் இந்தத்தடைகளை உடைத்து சங்கம் செயற்படும்.

நாம் ஒன்றை தெளிவாக சொல்ல விரும்புகிறோம். ஒவ்வொரு மனிதனிலுள்ளும் ஏதோ ஒரு திறமை ஒளிந்துள்ளது. அந்தத் திறமைகளை நாம் வெளிக்கொணர்வதன் மூலமே தனி ஒருவரால் மட்டுமே சாதிக்க முடியும் என்ற பழமைக்கோட்பாட்டை உடைக்க முடியும். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் விமர்சனங்களை உங்கள் ஆலோசனைகளை எம்மிடம் வெளிப்படுத்துங்கள். இது உங்கள் சங்கமம்—உங்கள் சங்கம் இதன் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பும் நிச்சயம் தேவை.

—நன்றி—



படிப்பகம்

www.padippakam.com



# திரும்பிப்பார்

- க.ஆனந்தன் -



ஓ........................
சகோதரனே !
உன் தேசத்தில்
சகிக்கின்ற
குருதியும்

உன்
தேசத்தில்
சரிகின்ற
உடல்களும்

உன்
சிந்தனைகளை
இன்னும்
மாற்றவில்லையா

அடிமையாய்
பிறந்து
அகதியாய்
மாறிய
போதும்

உன்
தனிகுணம்
உன்னை
தனிமைப்படுத்துவதை
இன்னும்
உணரவில்லையா
உன்மூளையுள்
பூக்களை தூக்கி எறிந்துவிட்டு
முட்களை மட்டும் ஏன்
நட்டுக்கொண்டிருக்கிறாய்....?

உயிரையே
விலையாய்
கொடுத்து
சுதந்திரத்தை
வேண்டி நிக்கும்
உன் தேசத்தை
திரும்பிப்பார்

உடல்களையே
கவசமாக்கி
தாயகத்தை
காத்து நிக்கும்
உன்
உடன் பிறப்பை
எண்ணிப்பார்

அங்கு அவர்களோ
குண்டுகளின்
மத்தியில் நின்று
தம் குருதியினுள்
வரைகின்றார்
எமக்காக
புதியதொரு
தேசத்தை
இங்கு
நீயோ ..............



படிப்பகம்

www.padippakam.com



# பேராசானுக்கு...

( அஞ்சலிக்கவிதை )

(மறைந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. துரைராஜா நினைவாக... )




நீண்டுநிமிர்ந்து நின்று
நிழல்தந்து– காலப்பறவைகள்
பலதங்கி கல்வி பயின்றதொரு
கல்வி-ஆலமரம்– நீளச்
சரிந்து விட்டதாம்– யுத்த
காலக்கால் அலையின்
கொந்தளிப்பால் கரைதெரியாது
கல்விக்கரை புரியாது– கலங்கித்
தவித்த தேசப்பா ருக்கு– கரையின்
குறியறிவித்து நின்றதொரு
கலங்கரைவிளக்கு அணைந்து விட்டுதாம்

தன்னைச் சூழப் பலவிழுது விட்டு
தன் சூழல் சமூகம் எல்லாம்
தலைநிமிர்வாய் செழிப்பாய் வாழ
தன்னை வருத்தி சேவை செய்த
தமிழீழ பேராசான் நீளத்துயிலில்–
ஈழம் அழுகிறது– தன்
ஞானப்புதல்வன் மறைவால்– எங்கள்
ஈழத்தாய் அழுகிறாள் இன்று.

பேராசானுக்கு,
பட்டம் பலபெற்ற பின்பும்
கட்டடகலையில்
புதுப்புது விதிகள் புகுத்திநின்ற பின்பும்
பணிவுடன் எத்துணை செருக்குமின்றி
சொல் செயல் அனைத்திலும்
தேசம் தேசத்தின் விடுதலை என்றே
எழுந்து நின்ற இந்தப்
பேராசானை
எட்ட நின்றே பார்த்து பார்த்து
பயில முயன்ற இந்த
ஏகலைவனின் அஞ்சலிகள்–

நெருப்பின் நடுவேயும்– நம்
தேசம் நிமிர்ந்திட வேண்டும்–
தேசம் உயர்ந்திட – தமிழீழ
தேசம் உணர்ந்திட ஒரு
சைக்கிளில் ஓடி ஓடி
உழைத்த இந்த மாமனிதனுக்கு
சுதந்திர தமிழீழம் ஒன்றுதான்
உண்மையான அஞ்சலி !
நிம்மதியாய் தூங்குங்கள்– நிச்சயம்
ஒரு தாயகம் பூக்கும்– அதில் உங்கள்
நினைவுகள் என்றும் என்றும்.........

– ச.ச.முத்து –
12.07.94.



படிப்பகம்

www.padippakam.com






# தமிழீழம் உங்களை அன்புடன் வரவேற்கிறது .......

(இரண்டாம் பாகம்)

## க . நடனபாதம் .



[ தமிழீழத்திற்கு அண்மையில் பயணம் செய்த ஒரு தமிழீழமகன் ஒருவரின் அனுபவங் கள் இங்கே தரப்படுகின்றன . இவை இரத்தத்தின் நடுவேயும் குண்டுகளின் நடுவேயும் ஒருதேசம் , எங்கள் தாயகம் எப்படித்தலை நிமிர்ந்து நிற்கின்றது என்பதனையும் , எங்கள் தாயகம் அதன் புலம்பெயர் மக்களை எப்படி அன்புடன் வரவேற்கிறது என்பதனையும் இந்தப் பயணக் கட்டுரை தெளிவாகச் சொல்கிறது . இந்தக் கட்டுரையைப் படிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழீழத்தின் இன்றைய நிலையை உணர்வு பூர்வமாக விளங்கிக்கொள்வர் . அதுவே இக் கட்டுரையின் நோக்கம் . ]

தூரத்தே கறுப்புப் புள்ளிகள் துல்லியமாகத் தெரிகிறது. கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டேன். புள்ளிகள் பெரிதாகிக் கொண்டே வந்தன. சந்தேகமேயில்லை அவை படகுகள்தான். இரத்தம் உறைவதைப போலிருந்தது. நீரைக் கிழித்துக்கொண்டு படகு அசுர வேகத்தில் எம்மை நெருங்கி விட்டது. இந்தப் படகுகள் ஸ்ரீலங்கா நேவிப் படகுகளாக இருக்குமோ என என் மனம் பதை பதைப்புடன் பார்க்கிறது. கடந்த காலங்களில் இந்த கிளாலிக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் எத்தனை எத்தனை பச்சிளம் குழந்தைகளை ,பெண்களை,வயோதிபரை மிருகத்தனமாக வெட்டிக்கொன்று வெறியாட்டம் ஆடினார்கள். ஆனால் வெளிநாடுகளின் செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களும், அதன் செய்தியாளர்களும் இந்தப் படுகொலைகளை– இந்த இன அழிப்பை எல்லாம் ஏன் மறைக்கிறார்கள் அல்லது மறுக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது வெளிநாட்டில் இருந்து செல்பவன் என்ற முறையில் வேதனை கலந்த விரக்தியுடன் எண்ணிப்



படிப்பகம்

www.padippakam.com



பார்க்கிறேன்.

என் நினைவுகளைக் கலைத்துக் கொண்டு படகிலிருந்தவர்களின் எங்கடை பொடியளின்ரை படகு .......... எங்கடை பொடியள் ............ "கடற்புலிகள" என்ற ஆரவாரம் எழுகிறது. அருகால் சென்ற அந்தப் படகுகளை கூர்ந்து பார்த்தேன். அவற்றில் எங்களின் தேசியக் கொடி புலிக்கொடி கம்பீரமாக அசைந்து கொண்டிருந்தது. தம்மை தங்களுடைய இனிமையான இளமையை எம்மக்களின் விடியலுக்காக பூரண பாதுகாப்புக்காக அர்ப்பணித்து அந்தப் படகினில் செல்லும் அந்தப் புலிவீரர்களை எண்ணிப்பார்க்கிறேன்.

இந்த இளைய மனிதர்களின் தியாகம்,அர்ப்பணம், தற்கொடைகள்தான் எம்மை வெளிநாடுகளில் மனிதர்களாக தலைநிமிர்வுடன் வாழவைக்கிறது. அந்தக் கடற்புலிப் படகு பக்கத்தால் சென்றபோது தெறித்த கடற்துளிகள் என்முகத்தில் பட்டபோது உண்மையில் நான் உடைந்தே போனேன். உன்னதமான எங்களின் சுதந்திரத்துக்காக மரணித்த எத்தனையோ இளம் போராளிகள் தம் மூச்சை— தம் இரத்தத்தை கலந்த இந்த கடற்துளிகள் என் முகத்தில் பட்டபோது நான் அடைந்த உணர்வுகளை விபரிக்க வார்த்தைகளில்லை. அவை நேரில் அனுபவித்தால்தான் தெரியும்.

கரை அண்மித்துவிட்டது. கரையில் பனைகளும்,தென்னைகளும் தெரிகின்றன. கரையை நெருங்கியவுடன் முழங்காலளவு தண்ணீரில் படகு நிற்பாட்டப்படுகிறது. என்னுடன் வந்தவர்களும், நானும் பிரயாணப்பைகளை தலையிலும், தோளிலும் காவிக்கொண்டு முழங்காலளவு தண்ணீரில் கரையை நோக்கி நடக்கிறோம். கரையின் பக்கமெங்கும் "operation yarl davi" என்ற பெயரில் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் நடாத்திய தாக்குதலில் எரிக்கப்பட்ட படகுகளும், கருகிய தென்னைகளும் அரசபயங்கரவாதிகளின் மனஇயல்புகளை தெளிவாக காட்டி நின்றன.

கரையெங்கும் மக்கள் கூட்டம். நேரம் இரவு ஒரு மணியை நெருங்கிக் கொண்டிருந்த அந்த நடுநிசி நேரத்திலும் நித்திரை என்பதை மறந்து சுறுசுறுப்பாய் இருந்தனர். கடற்கரை எங்கும் பெட்டிக்கடைகளும், பெட்டிக்கடைகளை சுற்றிவர எம் மக்களும். எப்போதோ நிறுத்தப்பட்டுவிட்ட மின்சாரத்தை சுமந்து இப்போது வெறும் கம்பிகளாக கம்பங்களில் தொங்கிக் கொண்டிருக்கும் மின் கம்பங்கள் எதையோ சொல்லிக்கொண்டு இன்னும் நிற்கின்றன. இனி சுதந்திரதமிழீழத்தில்தான் இந்தக் கம்பிகளில் மின்சாரம் வருமோ......? சுதந்திரமின்சாரம்.

அந்தக் கரையில் நான் கவனித்த அனைத்து மக்களும் எதிரிக்கு ஒரு சந்தர்ப்பம் கூட கொடுக்கக் கூடாது என்பதில் மிக அவதானமாக நடப்பதை காணக்கூடியதாக இருந்தது. சிறு வெளிச்சம்கூட வானில் வட்டமிடும் அலுமினிய அரக்கனுக்கு அந்த இடத்தில் குண்டு போட சந்தர்ப்பத்தை கொடுத்துவிடும் என்பதால் கடை வெளிச்சங்கள் கூட மட்டுப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருந்தன. "மக்கள் அனைவரும் கெரில்லாக்களாக மாறுவார்கள்" என்று 80 ம் ஆண்டில் தளபதி சீலன் (சாள்ஸ்) சொன்னது இன்று உண்மையாகி விட்டதை காணமுடிந்தது.

அந்தக் கரையில் இருந்து தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு பேருந்து (பஸ்) வண்டி மூலமும், சைக்கிள், மோட்டார் சைக்கிள், மோட்டார் வண்டி என்பன மூலமும் செல்ல ஆரம்பித்தனர். நானும் இன்னும் சிலரும் மோட்டார் வண்டி ஒன்றை வாடகைக்கு பிடித்துக் கொண்டு நீர்வேலி நோக்கி செல்ல ஆரம்பித்தேன். பாதையெங்கும் குன்றும் குழியுமாக இருந்ததால் பயணம் மிகமிக கடுமையாக இருந்தது. அரைகுறை நித்திரையுடன் அதிகாலை மூன்றரை மணிக்கு நீர்வேலியை சென்றடைந்தேன். எந்த நேரத்தில் எந்த வீட்டின்மேல் குண்டு விழுமோ, செல் விழுந்து சிதறுமோ என்று எண்ணியெண்ணி ஏங்கியபடி எம் மக்கள் தூங்கிக் கொண்டிருந்தனர்.

மறுநாள் விடிந்தது விடியல் பொழுதும் அதன் அற்புதமான அழகும் எங்கள் ஈழ மண்ணில் மிகமிக ரம்யமாக இருக்கும். கிழக்கிலிருந்து மெல்லமெல்ல மேலேழும்பும் சூரியனும் மெதுமெதுவாக சிவப்பாகும் வானமும், பறவைகளின் கானமும் ஆயிரம் கண் காணாது அதை ரசிக்க. வீட்டின் கதவைத் திறந்து வெளியே வருகிறேன். வீதியில் பார்க்கும் முகங்களெல்லாம் புது முகங்களாக காணப்படுகின்றன. என்னுடன் படித்தவர்கள், சின்னசிறு வயதுமுதல் என்னுடன் விளையாடிய நண்பர்கள், உணர்வுகளுடன் உணர்வாய் ஒன்றி நின்ற தோழர்களில் ஒருவரைக்கூட காணமுடியவில்லை. எங்கே சென்றுவிட்டார்கள்? நான் பத்து வருடத்திற்கு முன்னர் இங்கிருந்து நான் வெளிநாடு புறப்பட்டபோது இந்த வீதியெங்கும் நின்றார்களே...? இன்று எங்கே சென்றுவிட்டார்கள்....? அவர்களில் பலர் எங்கள் மண்ணினை மீட்டொரு மகத்துவம் காத்திட ஆயுதம் ஏந்தி சென்றுவிட்டனர். மிகுதிப்பேர் விமானம் ஏறி வெளிநாடு போய்விட்டார்கள். எஞ்சி இருக்கும் சிலரும் எங்கோ......? ஆயினும் அவர்களை சந்திக்க என் மனம் மிகவும் விரும்பியது.



படிப்பகம்

www.padippakam.com



காலையில் வெள்ளை வெள்ளையாய் உடைகளுடன் சிறுவர்களும், சிறுமிகளும் பாடசாலைக்கு போய்க்கொண்டிருந்தார்கள் எவ்வளவு குண்டுவீச்சின் நடுவேயும் செல் அடியின் நடுவேயும் மானிடத்தின் ஆதார சுருதியான அந்த கல்வியை பெறுவதில் எம் மக்கள் காட்டும் ஆர்வம் பிரமிக்கத்தக்கது. விடுதலைப் போராட்டத்தினுள்ளும் கல்வி ஊட்டப்பட வேண்டும் என்பதில் இந்த சிறுவர்கள்தான் எத்தனை மகிழ்வுடன் பாடசாலைக்கு செல்கிறார்கள்.

காலை உணவை உண்டபின் சைக்கிளில் ஏறி இருந்து உதைய ஆரம்பிக்கி றேன். வெயிலின் கடுமையும், சைக்கிளின் இயலாமையும் உடலில் வியர்வையாய் வெளிவருகிறது. என்ன செய்வது.? பொருளாதாரதடை...... எரிபொருள்தடை....

...

"ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும்
ஆதவன் மறைவதில்லை ஆணைகள் இட்டே
யார் தடுத்தாலும்
அலைகடல் ஓய்வதில்லை"

என்றோ கேட்ட பாடல் வரிகளை நினைத்துக் கொண்டு சைக்கிளை உளக்கினேன். நான் அன்று வரவேண்டிய இடம் "காந்தரூபன் அறிவுச் சோலை" மிகவும் அழகான சோலை ஒன்றுள் அமையப்பெற்றிருந்தது. மிகவும் அன்புடன் அந்த சிறுவர் நிலையபொறுப்பாளர் வரவேற்றார். ஏறத்தாழ இருநூறு குழந்தைகள், சிறுவர்கள் அங்கு இருந்தனர். அவ்வளவு குழந்தைகளும் மிகவும் சுத்தமாக உடையணிந்து மகிழ்வுடன் இருந்தனர். மிகவும் திறமையுடனும், விருப்புடனும் அந்த சிறுவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள். நாளை இவர்கள் விரும்பிய துறைகளில் கல்வி கற்க முழு ஏற்பாடுகளும் இன்றே செய்யப்படுகின்றது. இவர்களுடைய ஒளிமயமான எதிர்காலத்துக்கு இன்றே அத்திவாரமிட்டு நிற்கும் காந்தரூபன் அறிவுச் சோலையை விட்டு கனத்த நினைவுகளு டன் வருகிறேன். எங்களின் தேசிய விடுதலைப் போராட்டம் இன்று பல பரிமாணங்களை எடுத்து வருகிறது.

காந்தரூபன் அறிவுச் சோலையிலிருந்து வரும் வழியில் மாவீரர் துயிலகத்துள் செல்கிறேன். எங்கள் தேச விடுதலைக்காக உலகின் ஒப்புயர்வற்ற சுதந்திரத்தை ஆம் அந்த அற்புதத்தை நிகழ்த்திவிட தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் துயில் இல்லம் அது. பூங்கா போன்ற அமைப்புடன் காணப்பட்ட அந்த துயில் இல்லம் மிக அழகுடன், தூய்மையுடன் காணப்பட்டது. அதனுள் நுழையும் போதே மனம் உடைகிறது. நான் காலடிவைத்திருக்கும் இந்த மண்ணின் கீழே எத்தனை மாமனிதர்கள் உறங்குகிறார்கள். உடைக்க முடியா உறுதியுடன், வீரத்துடன், தியாகத்துடன் தம் இறுதி மூச்சுவரை சமர்புரிந்த எத்தனை மாவீரர்கள் புதைக்கப்பட்ட மண்மீது இப்போது நிற்கிறேன் என்றெண்ணியபோது மனம் லேசாகியது. வாழ்வின் உண்மையான அர்த்தத்தை கூறிநிற்கும் அந்த கல்லறைகளுக்கு மத்தியில் எவ்வளவு நேரம் நின்றேன் என்று எனக்கு தெரியவில்லை.

சைக்கிளில் வரும் வழியில் மக்கள் கூடும் ஒவ்வோர் இடத்திலும் பெரிய பங்கர்கள் அமைக்கப்பட்டிருந்தன. எந்த நிமிடமும் குண்டுவீச்சு தாக்குதலுக்கு தயாராக எம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். எதிரியின் இந்த குண்டு வீச்சுகள் எம் மக்களின் மன உறுதியை உடைக்கும் நோக்கங்கள் கொண்டவை. இந்தக் குண்டு வீச்சுகளால் எத்தனையோ குழந்தைகள் குறைபிரசவத்தில் நிறை குறைவாகவும், அங்கவீனர்களாகவும், மூளைவளர்ச்சி குன்றியவர்களாகவும் பிறந்துள்ளார்கள். என்றுதான் எம்மக்கள் குண்டுவீச்சின் பயமின்றி நிம்மதியாய் வாழப் போகிறார்களோ......?

" எந்த நேரமும் குண்டுகள்
வீசலாம் எதிரிபோலெமை
எண்ணிக் கொல்லலாம்
பந்தம் ஏந்திய அக்கினிப்
பேய்களின் பற்கள் எமை
பசிக்குணவாக்கலாம்..."

எனும் புதுவையண்ணனின் கவிவரிகள் எவ்வளவு யதார்த்தமானவை என்று எண்ணிக்கொள்கிறேன் என் நினைவைக் கலைத்துக் கொண்டு வானத்தில் இரைச்சலுடன் குண்டுவீச்சு விமானம்.... எங்கு பதுங்குவது? என்ன செய்வது...? இந்த நேரத்தில் சைக்கிளும் ஓடமாட்டன் என்று அடம்பிடிக்குதே..........

(மிகுதி மறு இதழில்)



படிப்பகம்

www.padippakam.com



FOR BØRNENE


# Hvilke dyr er de hurtigste?

**VIDSTE DU DET?**



Det langsommeste pattedyr er det trefingrede dovendyr. Det sover 16 af døgnets timer og er en dag om at tilbagelægge bare 100 meter!

Fugle har fartrekorden. I et dyk kan en vandrefalk nå op på 350 km i timen – det bliver kun slået af de hurtigste racerbiler! I vandret flugt kan en anden fugl, den asiatiske pighalesejler, flyve med en fart af mere end 160 km i timen. Den bedste sprinter af alle landdyr er geparden. Men i et væddeløb ville den lige netop blive slået af en fisk – sværdfisken.






படிப்பகம்

www.padippakam.com






### VIDSTE DU DET?

Den fugl, der kan flyve længst, er havternen. Den holder til i de arktiske egne i nærheden af Nordpolen. Når sommeren er slut der, flyver den til Sydpolen, hvor sommeren er lige ved at begynde. Hvert år tilbagelægger havternen op til 36.000 km på sin rejse over den halve klode!

### FAKTA OM FART

| | km/time |
|---|---|
| Pighalesejler | 160 |
| Sværdfisk | 110 |
| Gepard | 100 |
| Brevdue | 97 |
| Prærieantilope | 97 |
| Guldsmed | 80 |
| Gazelle | 80 |
| Hare | 72 |
| Væddeløbshest | 70 |
| Struds | 64 |
| Greyhound | 64 |
| Ræv | 64 |
| Zebra | 64 |
| Haj | 64 |
| Kænguru | 64 |
| Løve | 58 |
| Giraf | 51 |
| Kat | 48 |
| Elefant | 40 |
| Søløve | 40 |
| Delfin | 40 |
| Menneske | 32 |
| Flagermus | 24 |
| Svin | 18 |
| Honningbi | 18 |
| Kylling | 14 |
| Stueflue | 8 |
| Guldfisk | 6 |
| Slange | 3 |
| Edderkop | 2 |
| Skildpadde | 0,4 |
| Dovendyr | 0,1 |
| Snegl | 0,05 |



(3) *Geparden kan løbe med en fart af over 100 km i timen, når den jager antiloper, men den bliver hurtigt træt.*

(2) *Sværdfisk er verdens hurtigste fisk. Ved en test nåede en af dem op på 110 km i timen.*

(1) *Pighalesejleren flyver mere end 160 km i timen. Det er lige så hurtigt som et ekspres-tog.*



80 | 90 | 100 | 110 | 120 | 130 | 140 | 150 | 160



படிப்பகம்

www.padippakam.com



# சிறுவர் பகுதி



ஒரு ஈ 2 அல்லது
3 மாதங்கள் வாழும்

## கூடுதலான காலம் உயிர்வாழும் மிருகம் எது தெரியுமா ?

கூடுதலான காலம் உயிர்வாழக் கூடியது ஆமை . அவற்றில் சில 150 ஆண்டுகாலம் உயிர் வாழக்கூடியவை . வன விலங்குகளுக்கு உயிராபத்து அதிகம் . ஆகையால் அவை வீட்டு மிருகங்களைப் போலவோ அல்லது மிருகக் காட்சிச் சாலை மிருகங்கள் போலவோ நீண்ட காலம் வாழ முடிவதில்லை . பூச்சிகள் போன்ற சிறியவற்றைவிட , பெரிய மிருகங்களே நீண்ட காலம் வாழும் .



ஒரு வகைத் தும்பி
இது சில மணிநேரமே
உயிர் வாழும் .




வண்ணாத்துப் பூச்சியின்
வயது ஒரு வருடம் .



ஒரு எலி 5 வருடங்கள்
வரை வாழும் .



அகிளானின் வயது
10 வருடங்கள் .




குதிரையின் வயது
40 வருடங்கள் .



நாய் 15 வருடங்களில்
முழுக் கிழப் பருவத்தை
அடைந்துவிடும் .



தலையில் கொண்டையுள்ள
கிளி 75 வருடங்கள் வாழும் .



சில இராட்சத ஆமைகள்
150 வருடங்கள் வாழும் .



படிப்பகம்

www.padippakam.com




**வேகம் குறைந்த மிருகம்**



உலகத்தில் மிகவும் மெதுவாகப் பயணம் செய்யும் விலங்கு முன்று கால் தேவாங்கு. இது மிகவும் சோம்பேறித்தனம் கொண்ட விலங்கு ஒருநாளில் 16 மணி நேரம் உறங்கும். ஒரு நாளில் நடக்கும் தூரம் 100 மீற்றர்களாகும் .

3 சிறுத்தை 100 கி . மீ வேகத்தில் ஓடக்கூடியது. ஆனால் விரைவாகக் களைத்துவிடும் .



2 தளப்பத்து மீன் 110 கி . மீ . வேகத்தில் ஓடக் கூடியது .



1 கூர்வால் குருவி 160 கி . மீ . வேகத்தில் பறக்கும் .



## மிருகங்கள் பறவைகள் சிலவற்றின் வேகம் .

| | கி . மீ . மணி |
|---|---|
| 1 . கூர்வால் குருவி | 160 |
| 2 . தளப்பத்து மீன் | 110 |
| 3 . சிறுத்தை | 100 |
| 4 . கருமான் | 97 |
| 5 . பறக்கும் நாகம் | 80 |
| 6 . அராபிய மான் | 80 |
| 7 . முயல் | 72 |
| 8 . பந்தயக்குதிரை | 70 |
| 9 . நெருப்புக்கோழி | 64 |
| 10. நரி | 64 |
| 11. வரிக்குதிரை | 64 |
| 12. சுறா | 64 |
| 13. கங்காரு | 64 |
| 14. சிங்கம் | 58 |
| 15. ஒட்டகச்சிவிங்கி | 51 |
| 16. பூனை | 48 |
| 17. யானை | 40 |
| 18. கடல்சிங்கம் | 40 |
| 19. டொல்பின் | 40 |
| 20. மனிதன் | 32 |
| 21. வௌவால் | 24 |
| 22. பன்றி | 18 |
| 23. தேன்குழவி | 18 |
| 24. கோழி | 14 |
| 25. பவுண்மீன் | 6 |
| 26. பாம்பு | 3 |
| 27. சிலந்தி | 2 |
| 28. ஆமை | 0,4 |
| 29. சுறுசுறுப்பில்லா தேவாங்கு | 0,1 |
| 30. நத்தை | 0,05 |



படிப்பகம்

www.padippakam.com



# AIF's sølvrose til ANC

*Den 6. maj i år overrakte statsminister Poul Nyrup Rasmussen AIF's sølvrose til Tim Maseko fra ANC som påskønnelse for organisationens indsats for demokratiseringen af Sydafrika. Her bringer vi uddrag fra talen.*

*Tim Maseko*
*Søstre og brødre*
*Kære venner*

Jeg har den særlige glæde at overrække AIF's sølvrose til ANC, som her i dag er repræsenteret ved vores gode ven, Tim Maseko.

Sølvrosen bliver hvert år givet til en person eller organisation, som er engageret i kampen for menneskerettigheder og demokrati. Sjældent har modtageren af denne pris været så oplagt rigtig. For millioner af mennesker i hele verden symboliserer Nelson Mandela og ANC den kompromisløse kamp for retfærdighed og fred.

Overrækkelsestidspunktet er perfekt. I dag vælger Nationalforsamlingen Nelson Mandela til præsident for det nye Sydafrika. Denne triumf markerer et vendepunkt i historien. Den kan også bruges som et fælles løfte blandt hele jordens befolkning om at bekæmpe racisme, hvor den end viser sig, og uanset hvilken form den antager.

Jeg vil gerne give vores anerkendelse af den beherskelse og forsonende ånd, som har kendetegnet ANC's politisk gennem forhandlingsprocessen. Det giver håb for den fremtidige fred, stabilitet, fremgang, velstand og samfundsopbygning i Sydafrika.

Den danske regering og det danske Socialdemokrati står klar til at støtte denne sag.

Gennem årene har Socialdemokratiet i Danmark støttet ANC og kampen for et frit og demokratisk Sydafrika. Det var socialdemokratiske regeringer, som vedholdende fordømte apartheidsystemet i FN. I 1960'erne tog vi initiativ til uddannelsesmæssig og humanitær hjælp til ofrene for apartheid. I alt beløb denne støtte sig til ca. 1 milliard danske kroner. Og i midten af 80'erne pressede vi i Socialdemokratiet den højreorienterede regering i Danmark til at indføre omfattende økonomiske sanktioner mod Sydafrika.

Endelig har man nu opnået at få et politisk frit og demokratisk Sydafrika. Men kampen for et økonomisk og socialt frit og retfærdigt Sydafrika skal stadig udkæmpes og vindes. Det vil kræve en enorm indsats at overvinde arven fra apartheid - at forbedre boelsesområder, sundhedssystemet, den generelle uddannelse o.s.v.

I denne forbindelse står den danske regering klar til at støtte opbygningen af et nyt og retfærdigt Sydafrika med lige ret og lige muligheder for alle.

Vi lever med håbet om, at mens Sydafrika kæmper for at genopbygge sig selv, vil landet blive som et mikrokosmos over den nye verden, som eftertragter sin fødsel.

Denne verden vil være befriet for fattigdommens rædsler, sult, nød og uvidenhed. Det skal blive en verden med demokrati og respekt for menneskerettighederne - de idealer som AIF's sølvrose står for. ❑

ARTIKEL FRA "INTERNATIONAL HORISONT NR. 2. JUNI 1994"

COVER

PROF A. THURAIRAJAH, B.Sc. Eng(SL): Ph. D.(Cantab): C. Eng., F.I.E (SL): F.I.C.E: F.N.A.S (SL)
Vice- Chancellor Jaffna University Tamil Eelam.
Prof. A. Thurairajah served our nation Tamil Eelam. He worked hard to promote the education among young generation with less facilities. Because of economical blockde our people face severe hardship. There is no fuel to run the vehicles. He bicycled more than 40 k.m to teach the students. Many foreign countries have invited him to their universities. He refused those invitation inorder to educate his own country students. He died on 11.06.94.



படிப்பகம்

www.padippakam.com



# Et topmøde om mennesker

*Københavns-topmødet i marts 1995 kan i bedste fald blive et vendepunkt i historien.*


I marts næste år holder FN sit verdenstopmøde om social udvikling i København. "Social udvikling" er nok en lidt for direkte oversættelse fra engelsk. "Samfundsudvikling" ville være mere dækkende. Regeringer verden over gransker for øjeblikket det første udkast til den deklaration og handlingsplan, som skal vedtages på selve topmødet den 11. til 12. marts 1995. Hvad kan der komme ud af topmødet, er det spørgsmål, man nu stiller sig.

Københavns-topmødet finder sted i 50-året for FN's dannelse. Om alt går vel, kan det blive begyndelsen til at genføde FN til at klare det 21. århundredes nye udfordringer. Samarbejdet om fred og udvikling ændrer sig i disse år dramatisk efter ophøret af den kolde krig. Fra det magtpolitiske spil mellem to blokke og brandslukningsfunktionen i internationale kriser har FN nu mulighed for at koncentrere sig om denne verdens reelle problemer: underudvikling, social nød og menneskerettigheder. Og dermed forebygge at kriser opstår.

### Fattigdom og solidaritet

Politisk magt blev tidligere opfattet som givet af højere magter eller blev opnået ved vold og undertrykkelse. Efterhånden forstår de fleste regeringer, at deres politiske gennemslagskraft afhænger af deres evne til at skabe anstændige levevilkår. Fremtidens sikkerhedspolitik er ikke blot sikkerhed for nationer, men bliver i stadig flere samfund et spørgsmål om sikkerhed for det enkelte menneske.

Nøgleordene er den stadige mangel på solidaritet og vilje til at dele goder som indkomst, formue, jord, uddannelse, sundhed og boliger samt til at skabe ordentlige retstilstande. Topmødet vil derfor fokusere på denne "fattigdom" og på, hvordan bekæmpelse af arbejdsløshed, fattigdom og social opløsning håndteres i 90'erne. Løsningerne må sætte det enkelte menneske i centrum. Økonomisk vækst er et af midlerne men ikke et mål i sig selv.



Resultater kræver politisk vilje. Konflikterne i det tidligere Jugoslavien og Somalia viser med al ønskelig tydelighed militære løsningers afmagt over for politiske og sociale problemer. Selv tilhængerne af den enkle løsning med markedskræfternes frie spil og stram økonomisk politik har set i øjnene, at de sociale omkostninger i det lange løb er uholdbare. Sporene efter sammenbruddet i det tidligere Sovjetunionen og omvæltningerne i Østeuropa skræmmer. Sporene efter uhæmmede markedskræfters frie spil skræmmer lige så meget.

### Politisk vilje

Den politiske vilje kommer ikke af ingenting. Der skal lægges pres på medlemslandenes regeringer, ellers vælger de af bekvemmelighed den mindste fællesnævner. Danmark har stillet store midler til rådighed for aktivt at inddrage de folkelige organisationer i en parallel international konference og for at fremme udviklingslandenes deltagelse i topmødet. De, der har skoen på, skal også have muligheden for at sige, hvor den trykker.

Kan vi få topmødet til at forpligte sig til, at der i de enkelte lande udarbejdes strategier for at udrydde ekstrem fattigdom, fremme beskæftigelsen og tage fat på de grundlæggende samfundsproblemer som skolegang for alle børn, piger som drenge, analfabetisme, sundhed, familieplanlægning, rent drikkevand, bekæmpelse af narkotika og anden samfundsnedbrydende kriminalitet og fremme af initiativ og virkelyst, er vi kommet langt.

Kan man også blive enige om, at der kan findes penge til sådanne planer ved at skære ned på militærudgifter, gennemføre retfærdig og effektiv beskatning og spare på ineffektive og unyttige statsudgifter, er vi kommet meget langt.


Kan vi blive enige om at sætte præcise tidsplaner og på anden måde kvalificere og præcisere målsætningerne, kan Københavns-topmødet blive et spændende vendepunkt i historien.



படிப்பகம்

www.padippakam.com





# ஊரெழுப்பி

மனிதர்களும் விலங்குகளும்
என்ற நூலிலிருந்து .....
★ அன்ரன்யூட் – இளவாலை ★

உங்களில் எத்தனை பேருக்கு ஊரெழுப்பியைத் தெரியும்? தெரியாது என்றால், சொல்லுகிறேன் கேளுங்கள். ஊரெழுப்பி பறவை அல்ல. விலங்குமல்ல. அப்படி இல்லை என்றால் அது வெறும் சடப் பொருளா? அதுவும் இல்லை என்றால் அது என்ன? இதுவரை எவரும் அதைப்பார்த்ததில்லை. சில சமயம் குரல் மட்டும் கேட்கிறது. அதன் செய்கைகளை வைத்து அதனை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1...... நேர ஊரெழுப்பி.

2...... மௌன ஊரெழுப்பி.

3...... பேசும் ஊரெழுப்பி.

நேர ஊரெழுப்பி:- இது குறிப்பிட்ட நாட்களில் நேரம் தவறாமல் தொலைபேசி மூலமாக ஆட்களை எழுப்பும். ஆட்கள் எழுந்ததும் தொலைபேசியை வைத்துவிடும். பின் வேறொருவரது இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும். பெரும்பாலும் இரவில் தான் இதற்கு வேலை.(அதிகம்)

மௌன ஊரெழுப்பி:- இது விரும்பிய எண்ணைச்சுற்றி ஆட்களை எழுப்பும். ஆனால் கதைக்காது. மறுபக்கத்தில் உள்ளவரது குரலை மட்டும் கேட்கும். எத்தனை கேள்விகள் கேட்பினும் மௌனத்தையே பதிலாகத் தரும். கேட்பவர்கள் வைத்தாலன்றி அது தானாக தொலைபேசியை வைப்பதில்லை.

பேசும் ஊரெழுப்பி:- இது முன்னைய ஊரெழுப்பிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. இது தொலைபேசியை எடுத்து தானாகவே கதைபேசத் தொடங்கும். தன்னுடைய விருப்பங்களை தெரிவிக்கும். பெண்களுடன் பேசவே இது விரும்பும். ஆண்களின் குரல் இதற்கு பிடிப்பதில்லை. வாய்க்கு வந்ததை கொட்டி தனது பசியை போக்கிக் கொள்ளும்.



படிப்பகம்

www.padippakam.com



தொலைபேசி:- விஞ்ஞான உலகத்தில் தொலைபேசியின் பங்கு மகத்தானது ஏனைய செய்தி பரிவர்த்தனைத் தளங்களிலும் பார்க்க குறைந்த செலவில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள இது பெரிதும் உதவுகிறது. அவ்விதமான ஒரு கருவியின் பயன் தெரியாமல் ஊரெழுப்பிகள் அதை தவறாக பாவிப்பது எவ்வளவு முட்டாள்தனமானது.

ஊரெழுப்பிகளுக்கு சார்பாக யார் வேண்டுமானாலும் கதைக்கலாம். அது நகைச்சுவை என்றுகூடச் சொல்லலாம். அதற்கப்பாலும் பரந்து கிடக்கும் மனிதம் என்ற சொல்லுக்கு பொருள் உண்டு. அதைத்தான் மனிதர்கள் கடைப்பிடிக்கிறார்கள். ■

## விளங்காப் புதிர்

இன்றைய உலகத்
தலைவர்கள் சிலரை
காணும் போதெல்லாம்
சிரிக்காமலிருக்க முடியவதில்லை.

உழைக்கும் மக்களை
குறிப்பிட்ட வயதுக்கு மேல்
"உனக்கேலாது வீட்டிலிரு"
என ஓய்வு கொடுக்கும்
சட்டத்தை இயற்றி விட்டு
தாம் மட்டும்
ஆயுள் பூரா
அரசியல் கதிரையில்
இருக்க ஆசைப்படுவது
எப்படி நியாயமாகும்?

"சட்டத்தின் முன்னே
அனைவரும் சமம்"
என்பதெல்லாம்
பொய்யாகி விடாதோ?



அலென் அலோசியஸ்
HERNING.



படிப்பகம்

www.padippakam.com



# இடம்

கழுதையும் பட்டாம்பூச்சியும் உலாப் போயின.

மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

'இந்த இடத்தில் நான் இசைக்கச்சேரி வைப்பேன் — இங்கே எனக்கு வரவேற்பிருக்கும்...' எல்றது கழுதை.

அது பாடத் தொடங்கியது.

என்ன கொடுமை... கழுதைக் கச்சேரி — கல்வீச்சு கலாட்டா என்று ஆகியது.

அடிபட்ட கழுதையும் பட்டாம்பூச்சியும் ஊரின் எல்லையில் சாய்ந்து கிடந்த ஒரு குச்சி வேலியின் அருகில் வந்து சேர்ந்தன.

கழுதைக்கு ஒரே கொண்டாட்டம்.

ஓணான்கள் வரிசையாக அங்கே வேலியில் உட்கார்ந்து தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத் தொடங்கியது.

என்ன ஆச்சரியம்!

தலையை ஆட்டி எல்லோரும் கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

வியப்போடு அசைவற்று நின்ற பட்டாம்பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு 'ஒன்றும் வியப்படையாதே... இங்கே அப்படித்தான்' என்று கூறியது.

சுருக்கமாக அது சொன்னது:-

'ஓணான்களின் ஊரில்
கழுதைகளும் வித்துவான்களே'.



# சிறுவர்க்கான ஓவிய போட்டியும் கண்காட்சியும்.......

தமிழ் குழந்தைகள் சிறார்கள் தமது எண்ணங்களை கற்பனையை சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கான ஒரு அரிய சந்தர்ப்பத்தை நாம் விரைவில் ஏற்படுத்த உள்ளோம். சித்திரம் என்பது மனதுக்கும் அறிவுக்கும் மிகச் சிறந்த ஒரு ஊக்கியாகும். எனவே பெற்றோர் தமது குழந்தைகளை இந்தச் சித்திரப் போட்டியில் பங்கு கொள்ள இப்போதிருந்தே ஏற்பாடு செய்தல் நல்லது. ஓவியப் போட்டி நடைபெறும் திகதி மற்றும் பரிசு விபரங்கள் விரிவாக பின்னர் அறிவிக்கப்படும்.

டெனிஷ் தமிழ் தோழமை
– ஒன்றியம் –



படிப்பகம்

www.padippakam.com



# புதுயுகம் எழுதிடு!




புயலோடு திசையெனினும்
புதுயுகம் எழுதிடு நீ
அயலாரும் அண்ணாந்து
அடியவனைப்பார்க்கட்டும்.

இதிலொரு உனக்காக
இன்றுகொள்ளி எடுத்துவிடு
பதிலேது பார்ப்போர்க்குப்
படிக்கட்டும் உன்புரட்சி.

நாற்சுவருள் உனக்கமைத்த
நல்வழிப்படுத்தும்
ஆன்றோர் ஆக்கங்கள்
அடியோடழியட்டும்.

அம்மா நீ ஆக்கிவிடு
இன்றோடு புது ஆக்கம்
புரட்சிகள் வெடிக்கட்டும்
பூவுலகெங்கணும்.

பூகம்ப அதிர்வில்
பூமியெங்கும்
உன் புரட்சி
புயலாகி ஒலிக்கட்டும்.



ஏகாந்த சாஸ்த்திரங்ங்கள்
இனிமேல் இங்கு வேண்டாம்
ஏந்திடு அம்மா
A-K-47.

**செல்வி குப்பிளான் சாந்தினி**
**தமிழீழம்.**



படிப்பகம்

www.padippakam.com



# TIL MIN VEN SOM BOR I TAMILEELAM

## SKABE ET GODT LIV




Jeg kan forstå, at
Geværet på jeres skuldre og
Jeres fodspor i skoven er
kun for os

Vores kampen er
ganske rigtig
fortsætte kampen for
At befri vores hjemmeland.
I må ikke
Nedlægge våbnene
Vi vil være der
Før I føler,
I er alene.

Jeg ved at
vores race tæller
Dagne til deres død.
Hvis vores land
Lå ved siden
Af Danmark
ville vores land
allerede være befriet - men
vi ligger imellem
To umenneskellige lande(Indien og Srilankan).

Hvis I ønsker, at
skabe et godt liv
For vores race
Må I **ikke**
Nedlægge våbenene.

Ramanan
Cokkedal
Helsingør.



படிப்பகம்

www.padippakam.com



# Tamilsk historire og oplevelse

Ramanan
Cokkedal
Helsingør.

Man skal ikke acceptere at en race er i et andet land som flygtning en lang periode. Det skaber økonomisk, politisk og kulturel uro i landet. Nu har tamilere problermer i deres eget land, derfor er det flyttet til andre lande. Men de skal opholde sig i Danmark eller i andre lande på ubestemt tid. Man skal arbejde på at de kan vende tilbage til deres hjemland når de få et selvstændigt land.

I Danmark accepteres flygtninge på grund af dankernes humanitære holding. Men nogle er imod det, fordi de tror at flygtninger forringer danskernes muligheder i samfundet. Begge synspunkter er rigtige og man skal acceptere dem. Jeg mener ikke at de danskere som accepterer flygtninge ikke holder af deres land og at de som er imod flygtninge ikke er menneskelige.

Menneskelighed, venlighed og kærlighed er der meget i Danmark. Hvis modstanden mod flygtninge øges i Danmark som det er sket i mange andre lande har man som flygtninge ikke mange muligheder for at bosætte i et andet land.

Hvorfor flugter tamiler fra deres eget land? De har deres eget sprog, religion, kultur, og havde deres eget land. De lever i et konflikfyldt samfund. Det er hverken startet idag eller igår. I de sidste 400 år har tamiler levet under andres herredømme.

I de 15. århundrede kom portugisere til Ceylon. Dengang var der kongeriger. De tamilske og singlesiske kongrige. Portugiserne kom af handelsmæssige årsager. Men de tog hele øen undtagen det tamilske kongerige. Efter et langt slag, hvor den tamilske konge Sangilian døde, tog portugiserne hele øen. Efter mange år kom hollænderne og væltede den portugisisk regering og dannede en hollændsk regering. Dengang fik tamilerne lidt flere rettigheder. Efter hollænderne kom englænderne og overtog magten over øen.

I 1948 fik Ceylon sin uafhængihed. Men singhalesere over tog magten. Efter 1948 kunne tamiler ikke få arbjde, de kunne ikke blive optaget på universiteterne. For at komme ind på et universitet skal en sinhaleser have 160 point ud af 400, mens en tamiler skal have 200. Når tamilske ledere stillede spørgsmål, lukkede militæret munden på dem.

De tamilske ledere blev bange og boede i Colombo uden kontakt med tamiler. Tamiler kom opposotion til deres ledere. Tamilske spørgsmål blev besværet af singhalesiske gevær. Efter hvert vælg voldtog singhaleserne tusindvis af tamilske piger og dræbte tusindvis af tamiler. Hvis tamiler får et selvstændigt land, kan de får et fredfyldt liv.



படிப்பகம்

www.padippakam.com



Når tamilere danner en modstandsbevægelse vil der komme en løsning på det tamilske problem. Nogle unge starter en organisation i 1972. LTTE leder V.Prabaharan og nogle andre lavede mange regler. Medlem af denne organisation må ikke ryge, drikke alkohol og røve. Men nogle accepterede ikke og de blev opgivet og startede en gruppe selv. Nogle medlemmer forsatte i LTTE, fordi de accepterede reglerne i LTTE. Fordi reglerne har forbinelse med tamilske kultur. Tamilere accepterer også LTTE og dres regler. Så mange unge går ind i LTTE.

Indien er ikke interesset i et fredeligt i Tamil eelam og Srilanka. Indien tog kontakt med LTTE og andre grupper, som gik fra LTTE, og gav dem militær træning og våben. Det var i Indien i 1983.

LTTE(LIBERATION TIGERS OF TAMIL EELAM), TELO (TAMIL EELAM LIBERATION ORGANISATION ), EPRLF( EELAM PEOPLES REVOLUTIONARY LIBERATION FRONT) og EROS (EELAM REASEARCH ORGANISATION OF STUDENTS) fik militær træning og våben. TELO og EPRLF præsenterer som LTTE og rekruterede mange unge. Fordi dengang arbejdede alle grupper i hemmelighed. Så TELO og EPRLF snød mange unge. Efter træningen fik alle grupperne våben. Men kun LTTE tog tilbage til tamil eelam og angreb singhalesiske militær styrker, som blev skyldeskive og Jaffna var igen på tamilske hænder efter 400 år. Angrebet var ledet af colonel Kittu, som blev dræbt af indiske militær i 1993.

Den indiske regering reagrede kraftigt på angrebet og indkaldte TELO og gav yderligere militær træning og flere våben. De opfordrede TELO til at angribe og ødelægge LTTE og besætte Jaffna. Så i 1986 prøvede TELO at bruge deres magt, men i det sidste forsøg døde TELO lederen og mange andre. Nogle TELO medlemmer tog tilbage til Indien og nogle gik ind i LTTE.

Indien tabte i alle forsøg. Så Indien sendte en militærstyrke på 70000 til Tamil Eelam i juli 1987. Indien bekendtgjorde at tamilere ikke kan få deres eget land og at de skal dele Tamil Eelam i en nordlig og en østlig provins. LTTE og andre tamilere accepterede det ikke. Så i oktober 1987 startede kampene mellem LTTE og over 70000 indiske soldater. Det indiske militær brugte også TELO, EPRLF, PLOTE og ENDLF (ENDLF var fra PLOTE og EPRLF) imod LTTE.

"ONLY 2000 SMALL BOYS" sagde Indien og skylde på LTTE. De sagde at de vil splitte LTTE indenfor 24 timer. Men de mistede 2000 soldater i kampen mod LTTE og blev 1500 alvorligt såret.

Tamilere fortsatte deres støtte til LTTE. Mange unge gik ind i LTTE for med det formål af sende det indiske militær tilbage til Indien.



படிப்பகம்

www.padippakam.com



Det politiske og militær operationer lykkedes ikke for det indiske regeringen og militær. Så i 1990 tog de tilbage til Indien . Da de trak sig tilbage gav de næsten 4000 gevær og mange andre tunge våben til PLOTE, TELO, EPRLF og ENDLF som er Indien legesoldater.

PLOTE, TELO, EPRLF og ENDLF kaldte sig selv TAMIL NATIONAL ARMY (TNA). Efter Indien tilbagekaldte TNA startede volden imod LTTE. Men indenfor 48 timer havde LTTE erbret masse af våbnene og fjendens lejre. De blev tilbagekaldte fra Tamil Eelam og ført til Colombo og Indien. Hele den tamilske region kom under LTTE. LTTE og Srilanka fortsatte med at løse de tamilske problemer. Men Srilankas regering nægtede at give tamilerne ret. Srilankas militær trude på mange måder. Så startede kampen mellem LTTE og Srilankas militær i juni 1990.

Fra 1987 til 1990 var TELO, PLOTE, EPRLF og ENDLF med Indien og dræbte mange uskydige personer. I dag er de med Srilankas militær og dræbte mange uskydige personer. Disse gruppers handlinger er skyld i et mange fornuftige mennesker er flygtet fraderes hjemland.

LTTE er meget stærk og vandt i mange kampe. De er i en vindene position. Nogle venner af PLOTE, TELO og E[illegible] var i Danmark og i andre lande. De fører [illegible] imod LTTE. De er bange for at hvis andre lande godkender LTTE og Tamil Eelam som selvstændig stat, skal tamilere i udlande tilbage til Tamil Eelam. Mange tamilerne i Danmark og i andre lande støtter LTTE for at de gerne vil have et selvstændigland og de er ængstelig for at vende tilbage til deres hjemland.

I må ikke stole på Srilankas og Indiens regeringer og andre som bor i Danmark som dadler LTTE og tamilske frihed kæmmpe. I må ikke hade LTTE og tamilere som vender tilbage til deres hjemland. Danskerne skal gør noget for at løse vores problermer. Vi vil gerne leve et fredeligt liv i vores eget land. Vi mener fredeligt liv iet selvstændigt Tamil Eelam. I skal hjælpe os til få Tamil Eelam. I skal anerkende Tamil Eelam og LTTE. Så vi vil komme tilbage til vores land og vi kan få et fredeligt liv. I skal gør noget og I skal sende og I skal sende os til vores selvstændige Tamil Eelam. Vi tror at det er godt for Danmarks fremtid.

Man skal vende tilbage til sit eget land. Flygtninge som kom af [illegible] grunde kan ikke lide at komme tilbage og de vil sige de har problemer med LTTE. Det er ikke sandt.

Vi kan godt forstå hvilke problemer I får, når mange udlændinge kommer. Når Tamil Eelam blomsterer, vil vi rejse tilbage til vores hjemland.

Vi vil aldrig glemme jer, fordi Danmark gav os lige stilling med danskerne. I økonomi, uddannelse, arbejde får flygtninge får lige stilling. Flygtninge får aldrig i et andet fædreland.



படிப்பகம்

www.padippakam.com



# சென்று திரும்பாத நண்பனுக்கு . . .



நண்பன் சொன்னான்,
தூங்கி அநேக நாட்கள்
உனக்காக நான் போகிறேன் என்று!

இல்லை! இல்லை!!
இதனைச் செய்து முடிக்க
வேண்டுமென்ற ஆவல் தானே
தூக்கத்தை மறந்து போனது

இன்னும் சில நிமிடம்
என் நேரம் வந்து விடும்
அதன் பின், அதன் பின்
நிரந்தர தூக்கம் தான்
அது வரை என் இலட்சியத்தில்
மாற்றமிருக்காது நண்பனே!

எங்கள் வரவுக்காக
தவமிருக்கும் எதிரியின்
ஆயுதக் கிடங்குகள்
சுமந்து வர காத்திருக்கும்
ஆயிரம் வீரர்கள்

அம்மா!
இந்த யுத்தத்தில்
திரும்பி வராமல்
கூட போய் விடலாம்
இதற்காக கலங்கிடாதே!
எதிரியை வென்று
மலை மலையாய்
ஆயுதங்களை
சுமந்து வரும்
சக போராளிகளில்
ஒருவனாக என்னை
நினைத்துக் கொள்

என்னிடத்தை நிரப்ப
ஆவலோடு இருக்கும்
என் தங்கையை
இணைத்து விடு.

-துவாரகா-



படிப்பகம்

www.padippakam.com



# காவியமானவர்கள்

## சிறு கதை

செல்வி. ஆ. சாந்தினி



நில்லு ஜீவா! இண்டைக்கு இரண்டிலை ஒண்டு தெரிஞ்சாகனும். சைக்கிள் பெடலை மிதித்த அவன் கால்கள் அப்படியே நின்றுவிட்டன. எதுக்கு வனிதா நிக்கச்சொன்னாய். உங்களை என்னாலை புரிஞ்சுக்கவே முடியலைஜீவா. ஏன்? இல்லை எல்லாரும் வெளிநாட்டாலை வந்தால் ஜாலியாய் உலாவுவாங்கள் சந்தோசமாய் இருப்பாங்கள் ஆனா நீ...? எதுக்கு பைத்தியக்காரன் மாதிரித்திரியிறாய் எண்டுதானே கேட்கப்போறாய். ஓம் ஜீவா! என்னைக்காரணம் கேட்க நீயார்? நான் உங்க காதலி. சினம்கொண்ட ஜீவா அவள் கன்னம் சிவக்கும்படியாக அறைந்துவிட்டான். காரணம் புரியாது அவள்கைகள்அவன் பாதங்களைத்தழுவின. ஆத்திரங்கொண்ட அவன்கண்கள் அவள் கண்ணீரைப்பார்த்தநிமிடத்தில் அமைதியடைந்துவிட்டது. இதப்பாரு வனிதா எனக்கு உன்மேல காதலுமில்லை கத்தரிக்காயுமில்லை. வீணானகற்பனையை விட்டிட்டு உன்னோட வேலையைப்பார். உன்னை அறைஞ்சதுக்கு என்னைமன்னிச்சிடு. அவ்விடத்திலிருந்து ஜீவா அவசரமாகப் போய்விட்டான்.

சுமதியின் நினைவுகள் அவன்கண்களில் நிரம்பியதால் தூக்கம் அவனை அன்று எட்டிக்கூடப்பார்க்கவில்லை. தூக்கமின்றிப்பாயில் புரண்டவன் சுமதி இயக்கத்துக்குப் போகிறேன் என்று எழுதிய கடிதத்தின் வார்த்தைகளைத்தன் கண்களில் ................

ஜீவா என்னைமன்னித்திடு உன்னை ஏமாற்றியதாக நினைக்காதே. எத்தனைநாளைக்குத்தான் இந்த மண்ணில் அந்நியனுக்கு நாம் அடிமையாய் வாழ்வது. நாளும் பொழுதும் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு பங்கரிலும் கோவிலும் வாழ்வதா? இப்படி நாளும் நாளும் சாவதைவிட எமதுமண்ணின் விடுதலைக்காய்ச் சில நாள் உழைத்துவிட்டுச் சாவதேமேலெனக் கருதுகிறேன். எங்கள் மகனுக்கும் இரண்டு வயதாகிவிட்டது. அவனையும் கொடுத்துவிட்டுத்தான் போகிறேன் மகளிர்படைப்பிரிவுடன். உன் அனுமதியின்றி மகனைப்புலிகளிடம் கொடுத்துவிட்டேன் என்று ஆத்திரப்படாதே. அவர்கள் அவனை கவனமாகப்பார்ப்பார்கள்... இந்நினைவுகளில் இருந்து மீண்டவனுக்கு அவனுக்காக இன்று உள்ள சொத்து அந்தக்குழந்தைதான் அதனை இப்போ பார்க்கவேண்டும் போலிருந்தது. சுமதி களத்தில் மடிந்துவிட்டாள் எனும் சேதி கிடைத்து அவன் நாட்டிற்குத்திரும்பி இன்றுடன் 42 நாட்கள்.



படிப்பகம்

www.padippakam.com



பிள்ளைகள்பராமரிப்பு நிலையத்தில் தன் பிள்ளையைக்கண்டதும் வாரி அணைத்து முத்த மழைபொழிந்து கண்ணீர் சிந்தியபடி மாவீரர்துயிலும் அந்தக்கல்லறையை நேக்குகிறான். அவன்பின்னே யாரோ நிற்பதுபோன்றதோர் உணர்வு அவனுள். கட்புலனைப்பின்னே வீசுகிறான். அவன் பள்ளித்தோழன் ரகு இன்று ஓர் போராளியாய் நிற்பதைக்காண்கிறான் ஜீவா! போகலாமா ஜீவா. ம். ரகு என்ரபிள்ளையை நான் வளர்க்கப்போகிறேன் பொறுப்பாளர்கிட்டைக்கதைச்சு வாங்கித்தாறியா. சரி நாளைக்கு வா.

மகனுடன் இனிக்காலம் பூராகவும் வாழப்போகிறேன் எனும் ஆனந்தத்தில் நேரத்துடனே வந்துவிட்டான் ஜீவா சிறுவர் நிலையத்திற்கு . ஜீவா! இவர்தான் திவாகர் இந்தச்சிறுவர்களுக்குப்பொறுப்பானவர். வணக்கம் என் பெயர் ஜீவா. ரகு எல்லாமே சொன்னான். நீங்க உங்கமகனைக் கொண்டுபோகலாம். எங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. சுபன் அப்பா வந்திருக்கிறாரடா எனத்திவாகர் அழைத்ததுமே அம்மழலை ஓடிவந்து ஜீவாவின் கரங்களைப்பற்றிக்கொண்டு கேட்கிறது.------

அப்பா நீங்களெப்ப அம்மா போனமாதிரி ஊர்வலம் போவீங்க. நான் — உன்னைவிட்டிட்டுப்போகமாட்டேனப்பன் எனக்கூறியபடி அவர்களிடமிருந்து விடைபெறுகிறான் ஜீவா.

இரண்டு வருடங்கள் ஒருவாறு ஓடி மறைந்துவிட்டது. சுபனுக்கு வயது 6 ஆகிவிட்டது. காலம் முழுவதும் மகனுடன் வாழ ஆசைப்பட்டவன் ஏனோ தன் எண்ணங்களை மாற்றிவிட்டான். அன்று திவாகரையும் ரகுவையும் சந்திப்பதற்காகக் குழந்தைகள் பராமரிப்புநிலையத்திற்குச் சென்றுவிட்டான். அவன் காண்பது கனவா நனவா எனத்துடித்தது அவனுள்ளம். ரகுவின் உருவப்படத்திற்கு குழந்தைகள் அஞ்சலிசெய்துகொண்டிருந்தனர். நிலைமையைப் புரிந்துகொண்டவன் அமைதியாய் இருநிமிடம் அஞ்சலி செய்துவிட்டுத்தான் வந்திருந்த காரணத்தை திவாகரிடம் தெரிவிக்கிறான். திவாகரால் அவனைப்புரிந்துகெள்ளவே முடியவில்லை இருந்தும் அவன் முடிவை ஏற்றுக்கொள்கிறான் திவாகர் என்ர பிள்ளையைக்கவனமாகப் பாருங்கோ. என்ர சுமதி சுபன் உருவில்தான் வாள்கிறாள். சரி ஜீவா உன்மகன் என்றைக்கும் நல்லாவே இருப்பான். ஜீவா பயிற்சிக்கு அனுப்பப்பட்டுவிட்டான்.

இரண்டு வருடங்கள் தாயின் அணைப்பிலும பின்பு தந்தையின் நிழலில் சில வருடங்கள் தவழ்ந்த அந்தப்பிஞ்சு மீண்டும் புலிகளுடன்.......... நினைவுகளைத்துரத்திவிட்டு அன்றைய தாக்குதலுக்குத்தன் அணியைத்தயார் செய்கிறான் ஜீவா.

புலிகளின் குரல் வர்த்தக ஒலிபரப்பு சுன்னாகம் செய்திகள் வாசிப்பவர் சீலன். நேற்றிரவு தச்சன்காட்டுப்பகுதியில் நிலைபெற்றிருந்த இராணுவத்தினரைப் புலிகள் விரட்டியடித்துள்ளனர். இத்தாக்குதலில் பல ஆயதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. இத்தாக்குதலுக்கு சிறப்புப் பிரிவினரால் தெரிவுசெய்யப்பட்ட அணியின் பொறுப்பாளர் கப்டன் ஜீவா உட்பட கப்டன் மதன், லெப்டினட் திருமால் ஆகியோர்



படிப்பகம்

www.padippakam.com



வீரச்சாவடைந்துள்ளனர். மகளிர் படையில் பணியாற்றி இந்திய இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த மேஜர் சுமதியின் கணவர் ஜீவா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தங்கள் இன்னுயிர்களை ஈந்துசென்ற இம்மாவீரர்களிற்கு எமது வீரவணக்கங்கள். புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம். மீண்டும் நாளை சந்திக்கும்வரை வணக்கம்கூறி விடைபெறுவது சீலன்.

வர்த்தக ஒலிபரப்பின் செய்தியை திவாகரின் செவிகளும் வாங்கிக்கொள்கிறது. ~~திவாகர்~~ இண்டைக்கு திவாகர் இண்டைக்கு இரவு தச்சன்காட்டுக்கு என்னோட குறிப்பும் கொண்டுபோகிறேன். சிலவேளை நான் திரும்பி வராவிட்டால் என்ர பிள்ளைக்கு என்ர உடம்பைக் காட்டுங்கோ என ஜீவா கூறியவை நினைவுக்கு வருகிறது. சுபன் கைகளை தன் கைகளுடன் கோர்த்தபடி நடக்கிறான்திவாகர் ஜீவாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக.. - - - -

(முற்றிலும்)

***செல்வி குப்பினான் சாந்தினி,***
***தமிழீழம் .***

## கோர்னிங்கில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி .

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

கடந்த 07 . 05 . 94 ம் திகதியன்று கோர்னிங் நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களால் புத்தகக் கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது . இப்புத்தகக் கண்காட்சியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 100 புத்தகங்களுடன் , மேலும் சேகரிக்க முடிந்த தமிழ்ப்பத்திரிகைகள் , சஞ்சிகைகள் , நூல்கள் , விளக்க அட்டைகள் , உட்பட சுமார் 500 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

பங்குபற்றிய ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே மூன்று புத்தகங்களைத் தயாரித்திருந்தனர் . உண்மையில் அவர்களுடைய முயற்சியை உற்சாகப்படுத்தவே இது நடாத்தப்பட்டது. ஆசிரியராலும் மாணவராலும் இணைந்து நடாத்தப்பட்ட இக் கண்காட்சிக்குக் கூலிஸ்ரொப் பாடசாலை சகல உதவிகளையும் செய்தது.

ஒவ்வோர் கல்வியாண்டிலும் அவ்வாண்டில் அடையப்பட வேண்டிய இலக்கைத் திட்டமிட்டு அதை அடைவதற்கு வசதியாகவும் , அதேவேளை பாடசாலை முடிந்து சோர்வு தரும் நேரத்தில் தமிழைப் படிக்கவரும் மாணவரது மனதை உற்சாகப் படுத்தி, திட்டமிட்ட இலக்கைநோக்கி அவர்களை களைப்பில்லாமல் நகர்த்திச் செல்லவும் இம்முயற்சி கைக்கொள்ளப்பட்டது .

மேற்படி கண்காட்சியில் அதிகமாக எல்லாப் பெற்றோரும் உற்சாகமாகக் கலந்துகொண்டதை நேரடியாகவே காணமுடிந்தது. மேலும் இது முதல் தடவையாக சிறு அளவில் பிள்ளைகள் செய்ததை பெற்றோருக்குக் காட்டுமுகமாகவே நடாத்தப்பட்டாலும் , மாணவர் ஒவ்வொருவரும் தாமும் ஓர் புத்தகத்தை உருவாக்கினோம் என்ற உற்சாகத்தைப் பெற்றிருந்ததை தெளிவாகவே காணமுடிந்தது . எல்லா மாணவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கி ஆர்வமூட்டப்பட்டது. தாய்மொழி சிந்தனை மொழியாக இருந்த நிலை மாற்றமடைந்து இரண்டாவது மொழியாக மாறிவரும் நிலையில் இத்தகைய முயற்சிகள் காத்திரமான பணி பணிவிடையாகும் .

தகவல் — தமிழ் மொழிப் பாடப் போதனைப் பிரிவு கோர்னிங். - (தே.சுக.துரை)



படிப்பகம்

www.padippakam.com



# Nyt håb for sukkersyge i hele verden

## Danske læger har fundet ny behandling

Mange sukkersygepatienter verden over vil formentlig kunne redde livet, efter at to danske læger har fundet en ny behandlingsmetode mod diabetisk nyresygdom, skriver Politiken i dag.
Lægernes opskrift på screening og behandling af den alvorlige og udbredte lidelse har ført til anerkendelse på verdensplan. Verdenssundhedsorganisationen WHO har netop accepteret metoden og vil anbefale den overalt.
- Det er jo ikke hverdagskost, at danske læger står bag så afgørende ting. Så vi er faktisk lidt stolte, siger overlæge, dr.med. Hans-Henrik Parving, Steno Diabetes Center.
Hans-Henrik Parving har sammen med professor Carl Erik Mortensen, Århus Kommunehospital, i årevis forsket i den risiko, sukkersygepatienter har for at udvikle nyresygdom. Deres metoder har gjort det muligt dels at forudsige, hvem der har risiko for at udvikle nyresygdom, dels at sætte tidligt ind med en forebyggende behandling. Perspektivet i behandlingen er meget stort, da den kan anvendes både til insulin- og ikke-insulinkrævende patienter.
Parving og Mogensens forskning vil formentlig også medføre betydelige samfundsmæssige besparelser, fordi man i mange tilfælde kan undgå at sætte patienterne i dialyse eller i hvert fald udskyde tidspunktet for dialysen i mange år.
De to lægers behandlingsmetode går ud på at give sukkersyge-patienter medicin, der normalt anvendes til mennesker med for højt blodtryk.
Behandlingen er i sig selv et gennembrud. Men lige så afgørende er, at lægerne kan påvise, hvem der risikerer at udvikle diabetisk nyresygdom. Sygdommen kan medføre nyresvigt og er hovedårsagen til sukkersyge-patienters død i en ung alder.

## STOP FLUGTEN TIL UDLANDET

I får ingenting der - men
I kan købe mangeting
Jeg mener alting
undtaget et selvstændit hjemmeland - så
stop flugten til udlandet.

Vores næste generation
kan ikke live i fred med sig selv
Hvis I rømmer fra hjembyen - så
stop flugten til udlandet.

Jeg kan se sne og sol
Men aldrig kan mærke
der frie vind
Altid jeg tænker på mit hjemland
Derfor siger jeg
stop flugten til udlandet.

-RAMANAN-



படிப்பகம்

www.padippakam.com



# To Our Neighbours

*O'Mount Sooriyakanda*
*Grief has darkened you*

*My thin younger sister*
*Much like my dear mother*
*Went from hither*
*Never to return from thither*

*They suspect my brother*
*To be a tiger*
*His eager hands that wipe our tears*
*Are handcuffed and led yonder*

*My heart is aching*
*With pain I am grieving*

*The shawl that adorned the shoulder*
*Of my father, on which I did slumber*
*Is found on the forecourt floor*
*Soaked in blood you will wonder*

*Life's great river*
*I believed would never dry*
*But now the river is frozen*
*In great despair*

*Close by to all the army camps*
*We searched in bushes and wells*
*Broke open recent mounts*
*In search of our dear lost ones*

*The reflection of the enemy's hearts*
*Is reflected in the deep broad crevasse*
*Found in every street to perceive*
*Come, come and see to believe*

*Shedding blood and sweat alike*
*Our house built with dreams and hope*
*The broken walls would display*
*The cruel face of our enemy away*

*Unknown foreign and unfamiliar faces*
*Could be seen on our forecourt floors*
*Staring at our family members*

*It is not fate, my neighbour*
*With tears to search the graves of yonder*
*Sooriyakanda mount greatly grieving tender*
*Even Buddha was once buried for you to wonder*



**-Subba- (translated from the original in Tamil)**



படிப்பகம்

www.padippakam.com



# அயலவனுக்கு...

துயரிருள் கவிய
சூரியகந்த மலை....

அம்மாவின் சாயல்
ஒல்லியான என்
இளைய சோதரி
இன்னும் திரும்பவேயில்லை.

துயர் துடைக்கத்
துடிக்கின்ற அண்ணாவின் கையில்
விலங்கிட்டுப்
புலியெனச் சொல்லி
பிடித்துச் சென்றார்கள்.

எனக்குள்
இன்னும் துயர் பரவ
வலிகொள்கிறது நெஞ்சு.

நான் கண்முடித் துயின்ற
அப்பாவின் தோளில்
கிடக்கிற சால்வை
முற்றத்தில்
இரத்தம் தோய்ந்து கிடந்தது.

சிறுவயதில் நான்
வாழ்க்கைப் பெருநதி
வற்றாமல் ஓடும்
என்றுதான் நினைத்திருந்தேன்.

இராணுவ முகாமுக்குச்
சற்றுத் தொலைவிலும்
கிணறுகளுக்குள்ளும்
புல் படர்ந்த பற்றைக்குள்ளும்
புதிதாய் எழுந்த மண்மேடுகள்
உடைத்தும்

நாம் காணாமற் போன - எம்
உறவுகளைத் தேடினோம.

கணத்துக்குக் கணம்
அந்த வாழ்கைப் பெருநதி
உறைந்து போய் நின்றது.



வாருங்கள் நீங்கள்
வந்து பாருங்கள்
..த்ரியின் அகத்தை
இன்னும ஆழ அகலமாய்
..ங்கள் தேசத்துத்
தெருவெங்கும் காணலாம்.

இரத்தமும் வியர்வையும் சிந்தி
கனவும் ஆசையும் விதைத்து
எழுப்பிய எங்கள் வீட்டுச்
சுவர்களின் சிதைவுகளில் காணலாம்.

எங்கள் வீட்டு முற்றத்தில்
பழக்கப்படாத
எங்களுக்குப் புரியாத
அந்நியமான
கொடிய மனித விரோதியின்
முகத்தைக் காணலாம்.

எனது அயலவனே!
சூரியகந்த மலைத் தொடரில்
புத்தரும் புதையுண்டு போன
புதைகுழிக்குள்
நீ நின்று தேடுவதும்
கொடிய வலிய
துயருள்
உன் விழிகள் கசிவதும்
விதியல்ல.

-சுபா-



படிப்பகம்

www.padippakam.com



# பேராசிரியர் அ. துரைராசா
## துணைவேந்தர்
## யாழ் பல்கலைக் கழகம்

தோற்றம் :- 10-11-1934

மறைவு :- 11-06-1994

பேராசிரியர் அ. துரைராசா 1988 செப்டெம்பரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகப் பதவியேற்றார். போர்க்காலச் சூழ்நிலை சார்ந்த நெருக்கடி நிர்வாகத்தை அவர் பொறுப்பேற்று நடாத்தியது பாராட்டத்தக்கதாகும். 1988 -1994 காலப்பிரிவில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப்படாது தொடர்ந்து இயங்கவைத்தது இவரது பாரிய சாதனை. இந்த வரலாற்று நிர்ப்பந்த காலத்தில் பல இன்னல்கள் மத்தியிலும் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தையும், நடைமுறையையும் வழிநடத்திச் சென்ற பேராசிரியர் துரைராசாவின் சேவையை பல அமைப்புக்கள் பாராட்டுவது நல்ல விடயம்தான் -முழு யாழ்ப்பாணமுமே பாராட்டுகிறது.

துரைராசா 1934 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் நாளன்று வடமராட்சியில் இமையாணன் என்ற புகழ்பெற்ற கிராமத்தில் செல்லம்மாவுக்கும் வேலுப்பிள்ளை அழகையாவுக்கும் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். இவர் பிறந்த இமையாணன் மண்ணுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. சங்கிலி மன்னனின் தளபதி இமையாணன் வாழ்ந்த காரணத்தின் அடிப்படையில், இந்தக் கிராமத்துக்கு இமையாணன் என்ற காரணப் பெயர்-சாதாரணமாக வாழ்ந்த குடும்பத்தில் பொருளாதாரச் சூழலில் துரைராசா பள்ளிப்பருவம் வரை படித்து வளர்ந்தது எல்லாம் இமையாணன்தான்.

### ஆரம்ப இடைநிலைக் கல்வி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த துரைராசா, எஸ். எஸ். சி. வரை அப்பாடசாலையில் கல்வி பயின்று திறமையாகத் தேர்ச்சி பெற்றார். உயர்கல்வியைத் தொடரும் நோக்கத்துடன் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பிரபல்யமாக விளங்கும் காட்லிக் கல்லூரியில் மாணவராய்ச் சேர்ந்தார். சிறு பராயத்திலேயே தகைமை சான்ற மாணவர் அவர். சிலர் - ஆரம்ப் சூரர்களாக இருந்து நாளடைவில் பின்னடைவதும் உண்டு. ஆனால் துரைராசா தனது முயற்சியால் திறமையை வளர்த்துக் கொண்டு, கல்வியில் முன்னேறியவர். அவரை உருவாக்குவதில் உடுப்பிட்டி, அமெரிக்க மிசன் கல்லூரியின் பங்கும் குறிப்பிடத்தக்கது. ஆரம்பக் கல்வி அவரின் கல்வி முன்னேற்றத்திற்கு நல்ல தளமாக அமைந்தது. கல்வியில் வெற்றிப் படிகளில் அவர் ஏறி வருவதற்கு, உடுப்பிட்டி-அமெரிக்க மிசன் கல்லூரி ஒரு காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

காட்லிக் கல்லூரியில் மாணவராய் இருந்தபோது கணிதம், பிரயோக பொறிமுறை, பௌதிகம், இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்றார். எச். எஸ். சி. யில் முதன்மையாகத் தேறிய பெறுபேறுகளின் அடிப்படையில் துரைராசா பல்கலைக்கழக நுழைவு விஞ்ஞானப் பரிசிலைப் பெற்றார். அந்த ஆண்டில் யாராலும் எட்டமுடியாத அளவிற்கு அவரின் பெறுபேறுகள் முன்னணியில் நின்றதால், 1952 இல் அனைத்து இலங்கையிலும் விஞ்ஞானப் புலமைப் பரிசு துரைராசா ஒருவருக்குத்தான் கிடைத்தது.

"கருவிலே திருவுடையார்" என்று கூறுவார்களே அவர் அப்படியுமில்லை. ஒரு மாணவனுக்கு அவனிடம் அமைந்துள்ள ஆற்றல் வன்மைக்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் உதவுபவர்கள் ஆசிரியர்கள். இந்த வகையில் விஞ்ஞானப் பாடங்களில் அவருக்குத் தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் இரு ஆசிரியர்கள் -ஒருவர் திரு. ரொபேர்ட் நவரெட்ணம். மற்றவர் திரு. எஸ். எஸ். செல்லத்துரை. இனி கணிதத்தில் துரைராசாவுக்கு வளம் சேர்த்தவர் திரு. ஏ. ராஜசிங்கம் ஆசிரியர் அவர்கள். கணித பாடத்தை முழுமையாக அறியச் செய்து அந்தப் பாடத்தைக் கூர்ந்து படிக்கும் அளவிற்கு அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் திரு. ராஜசிங்கம் அவர்கள்.

### பல்கலைக்கழகக் கல்வி

இந்தப் பின்னணியில் இலங்கை பல்கலைக்கழகத்தில் குடியியல் பொறியியல் கற்கை நெறியை யூலை 1953 முதல் 1957 வரை கற்று பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க சாதனையை நிலை நாட்டி பலரது பாராட்டுக்களையும் பெற்றவர் துரைராசா. முதலாண்டு இறுதிப்பரீட்சையில் மூன்று 'ஏ'-களைப் பெற்று பொறியியல் புலமைப் பரிசிலைத் தேடிக் கொண்டார். அந்த நாளிலேயே இந்தச் சாதனை மூலம் பல்கலக்கழகத்தில் அவருக்கு ஒரு கௌரவம் உண்டாகியது. தொடர்ந்தாற் போல தனது செயற்பாட்டால் பொறியில் கற்கை நெறி பகுதி ஒன்று, மற்றும் பகுதி இரண்டிலும் முதன்மையாகத் தேறி, முதல் வகுப்பில் பொறியியல் சிறப்புப் பட்டதாரியானார். அவர் நிலை நாட்டிய சாதனை இன்று 35 வருடங்களுக்கு மேலாகியும் எவராலும் முறியடிக்கப்படவில்லை.

### தொழில் முயற்சிகள்.

1957 யூலையில் இலங்கை பல்கலைக்கழகத்தில் குடியியல் பொறியியல்துறை போதனாசிரியராகச் சேர்ந்து கொண்ட துரைராசா அவர்கள், தனது சாதனைகளைப் பறைசாற்றாது 1958 ஏப்ரலில் பகிரங்க வேலைத் திணைக்களத்தில் (P. W. D) கனிஸ்ட உதவிப் பொறியியலாளராகச் சேர்ந்தார். சிறிது காலம் பின்னர் அதாவது 1958 ஆகஸ்டில் புதிய பரிமாணங்களைக் கருத்திற் கொண்டு அந்த வேலையில் இருந்து விலகினார். எந்தத் தொழிலையும் [illegible] கருதாதவர் அவர்.



படிப்பகம்

www.padippakam.com



**தகநாயக்காவும் கேம்பிறிட்ஜ் புலமைப்பரிசிலும்**

இலங்கை பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பெற்றதன் காரணமாக, இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில். பட்டப் படிப்பைத் தொடர அவருக்குப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. கல்வியில் வெற்றி கண்டாலும் முன்னேற்றப் பாதையில் பல நெருக்கடிகளைச் சந்தித்தார் துரைராசா. சிறீலங்கா அரசியலில் இனவாதம் முக்கிய சக்தியாகத் தலையெடுத்த காலம் அது. கொழும்பு அரசியலில் இனவாதிகள் அணி உருவாகத் தொடங்கியது. சமதர்மவாத அரசியலில் பெரும் தலைவராகக் கருதப்பட்ட தகநாயக்கா, இனவாத சகதியில் கையை நனைத்துக் கொண்டு கல்வி அமைச்சரானார். அவர் கையாண்ட கல்விக் கொள்கை தமிழ் மாணவர் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியது. சேர்ந்தாற் போல் துரைராசாவின் புலமைப் பரிசிலைத் தடுக்கும் ஒரு கோணத்தில் கல்வி அமைச்சர் தகநாயக்காவின் அணுகுமுறை அமைந்தது.

அப்பொழுது விஞ்ஞானம், கலை, கீழைத்தேய கற்கைநெறி என்ற ஒவ்வொரு துறைக்கும் ஒரு புலமைப் பரிசில் என்பதுடன், பொறியியல் மற்றும் கணிதமும் ஒரு நெறியாகக் கருதப்பட்டு புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. ஒரு பாடத்தில் புள்ளி குறைவாக இருந்தால் புலமைப் பரிசிலை ரத்து செய்யலாம் என்ற அடிப்படையில் கல்வி அமைச்சினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் துரைராசா அனைத்துப் பாடங்களிலும் உச்சப் புள்ளிகளைப் பெற்றிருந்ததால் தகநாயக்காவால் புலமைப் பரிசிலைத் தடுக்க முடியவில்லை. அத்துடன் சிங்களவர், தமிழர் -அவர் எவராய் இருந்தாலும் பெறு பேறுகளின் அடிப்படையில் புலமைப் பரிசில்

வழங்கப்பட வேண்டும் என்று அவரது பேராசிரியர்கள் அழுத்தம் பிரயோகித்தார்கள். சிலரைப் பொறுத்தவரை அந்தத் தர்மம் இப்போது மழுங்கிப் போய் விட்டது. இந்தப் புலமைப் பரிசில் அவருக்கு எட்டாது போயிருந்தால் துரைராசாவின் பெற்றோரின் பொருளாதார நிலை, அவர் சொந்தப் பணத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் போக அனுமதித்திருக்காது.

பேராசிரியர் துரைராசாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், கல்விமானாகவுமே நம்மில் பலருக்குத் தெரியும். கல்வியாளர் மட்டுமல்ல அவர். உலகளவில் புகழ் பெற்று விளங்கும் ஒரு பொறியியலாளர் என்று சிலருக்கே தெரியும். உலக அளவில் அவருக்குப் புகழைத் தேடித்தந்தது அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் புதிதாக வடிவமைத்த (Simple Shear Apparatus) என்ற பொறிதான் அனைத்துலகிலும் கட்டடப் பொறியியல், மற்றும் மண்பொறிமுறையில் (Soil Mechanics) அதிக செல்வாக்கைச் செலுத்துவது இவரது 'விதி'-தான். அவர் உருவாக்கிய 'விதி' இன்று பல்கலைக்கழகங்களில் கற்றுத்தரப்படுகின்றது. 1962 இல் இலங்கை திரும்பிய பேராசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் குடியியல் பொறியியல்துறை விரிவுரையாளராகச் சேர்ந்து, 'மண்பொறிமுறை' என்ற பாடத்தை உருவாக்கிய பெருமையும் இவரைச் சார்ந்தது. மண்பொறிமுறையில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆய்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

பேராசிரியர் துரைராசாவிற்கு நிலப்பாவாடை விரித்து வரவேற்று, தொழில் கொடுக்க பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், தொழில் நிறுவனங்களும் காத்து நின்றன. அவர் இலண்டனில் படிப்பு முடிந்து நாடு திரும்ப வேண்டும் என்ற எந்தக் கட்டுப்பாடும் அப்போது இருக்கவில்லை. கட்டப்பாடோ தடையோ இல்லாமல் தாராளமாக விலகிக் கொள்ளலாம். அதை அவர் சிறிதும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இங்கிலாந்து முதல் அமெரிக்கா வரை அவர் எங்கு வேண்டுமானாலும் தொழில் பார்த்திருக்கலாம்; ஆனால் அவர் அங்கு வேரூன்றவில்லை. தமிழ் மண்ணின் மீது அவருக்கு அளவு கடந்த பாசம். நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த மனத்தினர். அதனால் அவர் விடுமுறையில் ஊர்த்திருவிழாக் காலத்தில் மட்டும் கிராமத்தைத் தரிசிக்கும் மனிதராக வாழவில்லை.

**யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்**

பேராசிரியர் துரைராசா படிப்பிற்குரிய மதிப்புக்குத் தகுந்தவாறு பதவிகளைத் தேடி அலையவில்லை. துணைவேந்தர் பதவி

அவரை தேடி வந்தது. அந்தப் பதவிக்கு விண்ணப்பிக்காமலேயே 1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியைச் சமுதாயப் பொறுப்பாகவே ஏற்றுக்கொண்டார். பேராசிரியர் துரைராசா பதவியேற்று இரண்டு மாதங்களுக்குள் அவரது அலுவலக யன்னல், கதவுகள் உடைக்கப்பட்டன. ஆனாலும் கலங்கவில்லை அவர். அவரது தார்மீக பலம் அவருக்குத் துணையாய் நின்றது. 1983 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடாதிபதியை மாணவர், அறையில் சிறை வைத்து சன்னதம் செய்தனர். அவரை மீட்டெடுக்க சகபாடிகளான சிங்களவர் தயங்கினர். பீடாதிபதியை மீட்டெடுத்த பெருமை பேராசிரியர் துரைராசாவையே சாரும். பதற்றமோ குழப்பமோ இல்லாமல் அவர் இதனைச் செய்தது பலரை பிரமிக்க வைத்தது.

பல்கலைக்கழகத்தின் சிறப்பு அதன் தலைமைப் பொறுப்பில் உள்ளவரிலும் தங்கியுள்ளது. பொறுப்பில் உள்ளவர் ஆற்றலும் ஆளுமையும் பெற்றிருக்க வேண்டியது மிக மிக அவசியம். அத்தன்மை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று விளங்குபவர் பேராசிரியர் துரைராசா.

துணைவேந்தர் எப்படிப் பழக வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்று சில எழுதாத விதிகளை ஏற்படுத்தி 'மண்ணில் கால்படாமல்' நடப்பவர்களும் உள்ளனர். ஆனால் பேராசிரியர் துரைராசா வெகு சகஜமாகப் பழகினார். அவரைப் போல் எளிமையாக எல்லோராலும் பழகிவிட முடியாது. இந்த வகையில் பார்த்தால் ஒரு சராசரி மனிதன் போல் பழகுவதே அவரது ஆளுமை எனலாம்.

இளமையில் இருந்து பல மைல்கள், பல மணிநேரம் சைக்கிள் ஓடி பேராசிரியர் துரைராசா, தாளங்களில் ஆதிதாளம் என



படிப்பகம்

www.padippakam.com



சமித்தியா தாளம் செய்தார். 'தாளம்' என்ற பதத்திற்கு ஏற்ப மாணவரிடம் இருந்து எந்தவித இலாபத்தையும் எதிர்பார்க்காமலேயே அவர் செயல்பட்டார். மனிதாபிமானம் நிறைந்த பரிவு அவருடையது.

### துணைவேந்தரின் சாதனைகள்

துணைவேந்தரின் சாதனைகள் பற்றிப் பெருமைப்படுவதற்கு எத்தனையோ விடயங்கள் உள்ளன. பேராசிரியர் துரைராசா துணைவேந்தராகக் கோலோச்சிய காலத்தில் தமிழ் மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அவர் நிகழ்த்திய கருமங்கள் யாழ் குடா மக்களின் கவனத்தையும் பாராட்டையும் பெற்றவை.

நெருக்கடி கால நிர்வாகத்தில் அவர் ஆற்றிய சேவைகள் அவர் ஆளுமைக்கு ஒரு உயர் உதாரணம். விவசாய அபிவிருத்திக்கான முயற்சியாக விவசாய பீடம் 1990 இல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் மீன்பிடித்துறைக்கு ஒரு பீடம் நிறுவி அதன்மூலம் மீன்பிடியை வளர்க்க 'ரொஸ்சே' பல்கலைக்கழகத்துடன் ஓர் உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது. போர் காரணமாக அது கிடப்பில் உள்ளது. மேலும் புறநிலைப் படிப்புகள் அலகு, தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கை நெறி ஆகியவைகளை நிறுவிக் கல்வியை பரவலாக்கியது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆய்வுகளை நூல் உருவில் வெளியிட நோர்வே அரசின் உதவியுடன் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துணைவேந்தரின் முயற்சியால் பொறியியல் பீடத்திற்கு ஒரு பேராசிரியர் நியமனம் பெற்றுள்ளார். ஆனால் பொறியியல் பீடத்திற்கு அரசு நிதி வழங்காத நிலையில் பொறியியல் பீடம் ஆரம்பித்த இடத்திலேயே உள்ளது. இதே போல் எட்டு கட்டடங்கள்

போர்ச் சூழல் காரணமாக முடியாத நிலையில் கிடப்பில் உள்ளன. ஏழை மாணவரின் பல்கலைக்கழக கல்வியைக் கருத்திற் கொண்டு துணைவேந்தரின் முயற்சியால் துணைவேந்தர் நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. கல்வியில் இவருடைய புலமையும் ஆளுமையும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிடம் இருந்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு உதவிகளைப் பெறவும் உதவின.

### பேராசிரியர் துரைராசாவின் கல்விச் சிந்தனைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழினத்தின் பல்கலைக்கழகம். அது உலகத்தின் சிறந்த பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும். அதற்காக தமிழ் மக்கள் எல்லோரும் பாடுபட வேண்டும், சமூக அக்கறையுடன் ஆய்வுகள் மற்றும் கல்வி வழங்குவதன் மூலம் சகல துறைகளிலும் பல்கலைக்கழகம் அகலக்கால் வைத்து 24 மணி நேரமும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் போல் சமூகத்திலிருந்து விலகி தங்க கோபுரம் போல் பல்கலைக்கழகம் செயலாற்றுவது பயன்பொருத்தமாகாது. அடிப்படைத் தளத்தில் பல்கலைக்கழகம் காலை ஊன்றிக் கொள்ள வேண்டும். ஆலவிருட்சம் போல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வளர வேண்டும் என்ற செழுமையான சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தார். தமிழ் மக்களுக்கு அந்நியமான மதிப்பீடுகளை முன் நிறுத்தாமல் நிகழ்காலம், எதிர்காலம் -இவைகளுக்குப் பொருத்தமான கல்வி சிந்தனைகளை வெளிப்படுத்தி தம்மை சிந்தனை வயப்படுத்தும் தன்மை இவர் கல்விச் சிந்தனையில் இழையோடி நிற்பது குறிப்பிடத்தக்கது.

சரியான, தெளிவான, அறிவுபூர்வமான கருத்துக்களை அஞ்சாமல் கூறும் ஆற்றல் உடையவர். சமகாலத்தில் சர்ச்சைக்குரிய தனியார் கல்வி நிறுவனங்கள் (Tutory) பற்றிக் கருத்து வெளியிட்டவர் அவர். "பள்ளிக்கூடங்கள் அர்ப்பணிப்புடன் கடமை செய்தால் தனியார் கல்வி நிறுவனங்கள் மெல்லச் சாகும்" என்ற கருத்தை உடையவர். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் கல்வியில் கவனம் எடுக்காது போனால் அது பின்னால் தமிழர் கல்வியைத் தாழ் நிலைக்குத் தள்ளிவிடும் என்ற இன்றைய யதார்த்த நிலையை உணர்ந்து பேசுகிறார்.

### ஊற்று நிறுவனம்

1980 இல் பேராசிரியர் துரைராசா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. அவரையே தலைவராகக் கொண்டது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உதவி வழங்குதலே இந் நிறுவனத்தின் பிரதான நோக்கம். வெளிநாட்டு நிதிநிறுவனங்கள் ஊற்றுக்கு உதவி வழங்குவதில் கலந்துகொள்கின்றன. கிராம அபிவிருத்தி, மரம் நடுகை, விவசாயம் ஆகிய இன்னோரென்ன துறைக்கு உதவி வழங்குவதன் மூலம் சயசார்புள்ள மக்களை உருவாக்குவதில் ஊற்று நிறுவனம் செயலாற்றி வருகிறது. அத்துடன் பேராசிரியர் துரைராசாவின் சீரிய முயற்சியாலும், உழைப்பாலும் இந்த ஊற்று அமைப்பு இமையாணனை அடுத்துள்ள கிராமங்களில் மனித நேய அமைப்புக்களின் உதவியுடன் சயதொழில் முயற்சிகள், மருந்து நிலையங்கள் போன்றவற்றை அமைத்து அரும் பணி ஆற்றுகிறது. பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்திருக்கும் பேராசிரியர், ஊழலின் நிழல் கூட தன்மேல் படாமல் கண்ணியத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்.

இத்தனைக்கும் பேராசிரியர் வழியில் அவர் தொடர்ந்து செல்ல, அவரது வாழ்வில் உந்துசக்தியாக நின்றவர் அவரது மனைவி ராஜேஸ்வரி. 20-4-1967 இல் பேராசிரியர் துரைராசா ராஜேஸ்வரியைத் திருமணம் செய்துகொண்டார். ஏற்ற இறக்கங்களில் உடன்நின்று உழைக்கும் மனப்பக்குவம் பெற்றவர் பேராசிரியர் மனைவி. அவரின் பிற்கால வாழ்க்கை உயர்வுக்கு தளம் அமைத்தவர் மனைவி தான்.

சிலர் பொறுப்பில் இருக்கும் போது மட்டும் பிரகாசித்து, அந்தப் பதவிகள் இல்லாதபோது இருக்கும் இடத்தைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாமல் கனவாய் கதையாய் போய்விடுகிறார்கள். பேராசிரியர் கொண்டுள்ள செல்வாக்கு இவர் பதவி விலகிப் போகும் காலத்தில், வரலாறு காணாத வகையில் மக்கள் எடுக்கும் விழக்களே நல்ல உதாரணம். பேராசிரியர் மக்கள் மனதிலே எப்போதும் மதிப்பும் செல்வாக்கும் மிக்கவர். ■

நன்றி: 'ஈழநாதம் - 29-3-94'



படிப்பகம்

www.padippakam.com



சென்ற இதழ் தொடர்ச்சி

# தமிழருக்குத் தமிழ் ஆண்டு, மாதம், கிழமை, எண் எது ?

ஓரைப் (ராசி) பெயர்களால் மாதங்களை அமைத்திருப்பது தமிழரின் வானியல் அறிவுக்கு இன்றும் அறிவியல் சான்றாக விளங்குகிறது.

சித்திரை முதல் பங்குனி வரை உள்ள மாதங்களின் பெயர்கள் தமிழிலிருந்து வடமொழிக்கு மாற்றப்பட்டன என்று தமிழ் அறிஞர்களும், வடமொழியிலிருந்து தமிழுக்கு மாற்றப்பட்டன என்று வடமொழிவாணர்களும் வாதிட்டு வருகின்றனர். (எடுத்துக்காட்டு: சித்திரை சைத்ரா; வைகாசி வைசாக; கார்த்திகை கார்த்திகா.)

மொழி ஞாயிறு பாவாணர் அயராது ஆராய்ச்சி செய்து சித்திரை முதல் பங்குனி வரை உள்ள 12 ஓரை (ராசி)களே 12 தமிழ் மாதங்களாகப் பின்பற்றல் வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

* ஏழு கிழமைகளில் புதன், சனி தவிர மற்றவை தமிழ்ப் பெயர்களே. புதன் அறிவன் என்றும் சனி காரி என்றும் வழங்கப்படுகின்றன.

* 1,2,3,4,5,6,7,8,9 என இன்று உலகம் எங்கும் எழுதப்படும் எண்கள் அரபி எண்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அராபியர்களுக்கு இந்த எண்களின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள். வடநாட்டு அறிஞர்களுக்கும் இவற்றின் தோற்றம் பற்றி ஒன்றும் விளங்கவில்லை. தமிழ்நாட்டின் பழைய எண் வடிவங்களைப் பற்றி அறியாமல் இருத்தலே இவ்வாறு அனைவரும் தடுமாறுவதற்குக் காரணம் ஆகும்.

அரபி எண்கள் என்றும் இந்திய எண்கள் என்றும் இவ்வாறு தடுமாறிக் கூறப்படும் அந்த எண்கள் (1,2,3 முதலியவை) பழைய தமிழ் எண்களே என்பது பின்வரும் பழந்தமிழ் எண் வடிவங்களைக் கண்டு உணரலாம்.

இவற்றை நோக்கி எண்ண வல்லவர்க்கு 1,2,3 முதலிய எண்களின் எழுத்து வடிவம்

தமிழகம் உலகத்திற்கு அளித்த கலையே என்னும் உண்மை புலப்படும் என்று மூதறிஞர் மு. வரதராசனார் கூறுகிறார்.

நாம் புதிதாக எதையும் புகுத்தவில்லை. இடைச் செருகலை அகற்றி, இழந்ததை மீட்டு நடைமுறைக்குக் கொண்டு வருகின்றோம்.

தமிழர்களிடம் வழிபடுவது, வணங்குவது, எழுதுவது, பேசுவது மிகுதியாகவும் போற்றுவது, பின்பற்றுவது, பரப்புவது, செயல்படுத்துவது குறைவாகவும் இருக்கின்றன. தனித்தனியாக உயரும் பண்பாடு மிகுதியாகவும் கூட்டாக ஒன்று சேர்ந்து உயரும் பண்பாடு குறைவாகவும் உள்ளன. தனிமரம் தோப்பு ஆகாது என்பது பழமொழி.

மன்னர் ஆட்சியில் இவை குறையாகத் தெரியவில்லை. மக்களாட்சியில் எண்ணத்திற்கு எண்ணிக்கை பலம் தேவைப்படுவதால் வெற்றி வாய்ப்பை இழக்கிறோம். செல்வாக்குப் பெறமுடியவில்லை. உலகம் அறிய வாழ இயலவில்லை. பல வகையிலும் துறையிலும் பாதிக்கப்படுகின்றோம்.

தொடர் ஆண்டைப் பொறுத்த வரை கூட வள்ளலார் ஆண்டு, பெரியார் ஆண்டு, அண்ணா ஆண்டு, பாரதிதாசன் ஆண்டு, கலைஞர் ஆண்டு, அம்பேத்கர் ஆண்டு என்று பலவாறாக அவரவர் விருப்பம் போல் பின்பற்றி வருகின்றனர்.

செய்யத்தக்கவை என்று சான்றோர்கள் புகழ்ந்து கூறியவைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவருக்கு எப்பொழுதுமே நன்மை இல்லை என்பது வையம் புகழ் வள்ளுவர் வாய் மொழியாகும்.

"புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்."

திருக்குறள்

எனவே, தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு, ஆகியவற்றின் நலனும் வளனும் பெருமையும் புகழும் நாடுவோர் அனைவரும் திருவள்ளுவர் ஆண்டு, சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை ஆகிய பன்னிரண்டு மாதங்கள், ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி ஆகிய ஏழு கிழமைகள், மேற்குறிப்பிட்ட இருவகை எண் வடிவங்கள் ஆகியவற்றைத் தம் வாழ்வில், வழக்கில் பின்பற்றவும் பரப்பவும் போற்றவும் வேண்டுவது தமிழரின் தலையாய கடமையாகும்.

ப. வேம்பையன்
கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்
தமிழ்நாடு



படிப்பகம்

www.padippakam.com

# சீதனம்

வேதனைகள் சுமந்த கன்னியர் இங்கே
வெந்து வெந்து போகின்ற நிலைகள்
சாதனைகள் நிறைந்த தமிழீழத்திலே
சரித்திரமாகி விட்ட கதைகளோ பல

உழைத்தும் மீதமில்லாக் கால மிது
ஊனை உயிரைக் குடிக்கும் கால மிது
வளைத்து வீசும் சீதன வலையிலே
வாழ்விழந்து போவோர் ஆயிரம் ஆயிரம்

பணமென்றால் பல்லைக் காட்டி அதள
பாதாளம் வரை செல்லும் கூட்டம்
குணமெனினும் பணம் இல்லை யேல்
குனிந்து மௌனம் கொள்வது மேனோ

தெய்வமென வாயளவில் ஏற்றிப் பெண்ணை
திரு இல்லையேல் கீழே இறக்கி
பொய்மையில் வாழும் மனிதர் கூட்டம்
இம்மண்ணில் நிறையப் பெற்றது மேனோ?

சீதனமெனும் பெயரால் (பெண்ணை) விலைபேசி
சீரழிந்து போன குடும்பங்கள் ஆயிரம்
ஆதனங்கள் கூட இல்லாது இன்று
அனைத்தையும் இழந்த கதையும் இங்குண்டு

ஏனிந்த இழிநிலை எம்மண்ணில்
எவர் வந்துதித்தார் பணத்தோடு இங்கு?
வானிடிந்து வீழ்ந்தாலும் அச்சமின்றி
வாழலாமே உழைப்பால் உயர்ந்து

ஆணுக்குப் பெண் சளைக்காத நிலை
ஆண்டாண்டு காலம் அறிந்த கதையன்றோ
தேனும் பாலுமாய் மனங்கள் ஒன்றிணைந்தால்.
தேவைதானோ சீதனம் இம் மண்ணில்?

சீதனம் இல்லாது (மையால்) வயதில்மிக ஏறி
சீரான வாழ் விழந்து கன்னியர் வாடுகையில்
சீரும் சிறப்புமாய் பாதிப் பேரிங்கு
சிரித்து வாழ்வது எவ்வகையில் நியாயமோ?

ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஒன்றிணைந்தால்
ஒரு காலமும் வாராது இம்மண்ணில் துன்பம்
பற்றிடலாம் இதனைப் பாங்குடன் நாமெல்லாம்
பறக்கவும் செய்திடலாம் சீதனமெனும் வல்லூறை.

- பாஞ்சாலி-
(கிளிநொச்சி)

---

இந்த வருடம் செப்டம்பர் மாதம் 2ம், 3ம் திகதிகளில் Herning Sønderager Skole ல்

# டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியத்தின்:

# கலைவிழா 94

www.padippakam.com

POSTBESØRGET AVIS
7401 HRC 58599

Chanchive
Danmarksgade 10
7500 Holsterbro

**HJÆLP BØRN I**

# TAMIL EELAM



Dansk-Tamilsk Venskabsforening
டெனிஷ் தமிழ் தோழமை ஒன்றியம்
Danish Tamil Friendship Association
PO Box 313 . DK-7400 Herning . Giro no. 7 84 59 52